தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

விலை ரூ.15 மலர் 22 | இதழ் 6 அக்டோபர் 2020

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

செயல்திறன் அளவீட்டு முறையில் திடக்கழிவு மேலாண்மை பணிகள்...

முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்/மேலாண்மை இயக்குநர் (பொ)
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

அக்டோபர் 2020

அன்புள்ள சகோதரிகளே,

ஒவ்வொரு மாதமும் எனது மகிழ்ச்சியான தருணங்களில் ஒன்றாக நான் நினைப்பது முற்றம் இதழின் வாயிலாக எனது கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் இந்த இனிய தருணங்களே.

குடும்பத்தையும் கவனித்துக் கொண்டு, குழுவையும் கவனித்துக் கொண்டு, கொரோனா வைரஸ் தொற்று பரவல் நடவடிக்கையில் சிறப்பாக செயல்பட்ட உங்களுக்கு எனது பாராட்டுகளை மேலும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் தயாரித்த கொரோனா தடுப்பு சாதனங்களும், மேற்கொண்ட விழிப்புணர்வு நடவடிக்கைகளும், அரசின் அறிவிப்புகளை அனைவரையும் கடைபிடிக்க வலியுறுத்திய பாங்கும் அனைத்துத் தரப்பினரின் பாராட்டுகளையும் பெற்றுள்ளது. மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக நீங்கள் இருக்கிறீர்கள் என்பதை இதன் மூலம் மீண்டும் உணர்த்தியுள்ளீர்கள்.

உங்களின் அயராத உழைப்பிற்கும், தளராத செயல்பாட்டிற்கு ஊக்கமளிக்கும் வரையில் நம் தமிழக அரசும், மகளிர் திட்டத்தின் வாயிலாகவும், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்களின் வாயிலாகவும் கோவிட் 19 சிறப்பு கடனுதவி, பாரதப் பிரதமரின் ஆத்ம நிர்பார் கடன் இணைப்புத் திட்டத்தின் கீழ் தெருவோர வியாபாரிகளுக்கு வங்கிக் கடனுதவி, விவசாயம் மேற்கொள்ளும் பெண் விவசாயிகள் நவீன விவசாயம் மேற்கொள்ளும் வகையில் வேளாண் இயந்திரங்கள் வாடகை மையம், சுய தொழில் புரியும் பெண்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி, பணிபுரியும் பெண்களுக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் என ஏராளமான உதவிகளை வழங்கி வருகிறது.

இந்த உதவிகளைப் பெற்ற நீங்கள்,

“வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்”

என்ற குறள்மொழிக்கேற்ப மேற்கொள்ளும் செயலின் வலிமை, உங்களின் வலிமை, அதற்கான தடைகளின் தன்மை, அதை முறியடிக்கும் உங்கள் குழுவினரின் வலிமை என அனைத்தையும் அறிந்து, ஆராய்ந்து அதற்கேற்ப தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்கு பல்வேறு கட்டங்களாக தளர்த்தப்பட்டு வருகிறது. கொரோனாவின் தாக்கம் குறைந்து வருகிறது என்பது நமக்கு மகிழ்ச்சியான செய்தியாக இருந்தாலும், கொரோனா அபாயம் முழுமையாக நீங்கவில்லை. எனவே நீங்கள் பாதுகாப்பாக உங்கள் செயல்பாடுகளில் ஈடுபட வேண்டும். மற்றவர்களையும் பாதுகாப்பாக இருக்க வலியுறுத்த வேண்டும்.

தன் வீடு, தன் குடும்பம், தன்னலம் என்று எப்போதும் நினைக்காதவர்கள் சுய உதவிக் குழுவினர் என்பதை அனைவரும் அறிவார்கள். பொது நலம், பிறர் நலம், நாட்டு நலம் என்பதில் அதிக அக்கறை கொண்ட உங்களின் செயல்பாடுகள் மேலும் சிறக்கட்டும் என வாழ்த்துகிறேன்.

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

மேலாண்மை இயக்குநர் (பொ)

இன்பாக்ஸ்

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

குறளும்-பொருளும்

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்.

ஒரு செயலை நம்மிடம் செய்யக் கொடுத்தால் அச்செயலின் நன்மை தீமை இரண்டையும் ஆராய்ந்து எது நன்மையோ அதையே செய்ய வேண்டும்.

உள்ளடக்கம்...

மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் கலந்துரையாடல்	05
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண். 110ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை	06
மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வேளாண் இயந்திர வாடகை மைய உபகரணங்கள் வழங்குதல்	08
கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம்	09
நம்பிக்கை சுய உதவிக் குழுவின் நர்சரி கார்டன் திறப்பு விழா	11
தேசிய ஊரக புத்தாக்கத் திட்டம் குறித்த ஆய்வுக் கூட்டம்	14
உயிர்களைக் காக்கும் இரத்த தானம்...	18
முற்றக் கச்சேரி	26
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்	31

முற்றம் வாசகர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு

அச்சு மற்றும் வெளியீட்டு செலவினங்கள் அதிகரித்துள்ள காரணத்தினாலும், தற்போது மாறிவரும் சூழலுக்கேற்ப முற்றம் இதழை புதிய தொழில்நுட்ப வடிவில் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ள காரணத்தினாலும் சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியாக விளங்கி வரும் நமது முற்றம் இதழின் விற்பனை விலை மற்றும் ஆண்டு சந்தா கட்டணங்கள் ஜனவரி 2021 முதல் கீழ்கண்டவாறு மாற்றம் செய்யப்பட உள்ளது என்பதை அனைத்து முற்றம் வாசகர்களுக்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

முற்றம் இதழின் தனிப்பிரதி / சந்தா விபரம்	தற்போதைய விலை	ஜனவரி 2021 முதல் மாற்றம் செய்யப்படவுள்ள புதிய விலை	ஜனவரி 2021 முதல் முற்றம் வாசகர்களுக்கான சலுகை விலை
முற்றம் இதழின் தனிப்பிரதி	ரூ. 15	ரூ. 20	ரூ. 20
ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180	ரூ. 240	ரூ. 200 (தள்ளுபடி ரூ. 40)
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360	ரூ. 480	ரூ. 400 (தள்ளுபடி ரூ. 80)
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540	ரூ. 720	ரூ. 600 (தள்ளுபடி ரூ. 120)

முற்றம் இதழின் வாசகர்கள் அளித்து வரும் தங்களின் ஆதரவினை இவ்விதழுக்குத் தொடர்ந்து வழங்கி உற்ற தோழியாய், உறுதுணையாய் என்றும் இருக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

– முற்றம் இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்

மலர் 22
இதழ் 6
அக்டோபர் 2020
விலை ரூ.15

ஆசிரியரிடமிருந்து...

கௌரவ ஆசிரியர்கள்	**முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப.,** செயல் இயக்குநர்/மேலாண்மை இயக்குநர் (பொ) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
	திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்	**எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்
ஆசிரியர் குழு	**ஜா. சம்பத்,** கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	கே. சுமதி, கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	எஸ். சாமுவேல் இன்பதுரை, கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
நிர்வாக ஆசிரியர்	**சி. சந்தோஷினி சந்திரா,** பொது மேலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிதி நிர்வாகம்	**சு. இராமலெட்சுமி,** நிதி ஆலோசகர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்	**கூ. பாபு,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
துணை ஆசிரியர்	**ஏ. கண்ணன்**
முதுநிலை கணக்காளர்	**சு. சசிகலா**
பிழை திருத்துபவர்	**எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு	**ஆ. சார்லஸ் சுரேஷ் பாபு**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்', தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை - 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413
தொலைநகல் : 044 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

பேரிடரை எதிர்கொள்வோம்...

அன்புள்ள வாசகர்களுக்கு

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் 13ம் தேதி பேரிடர் இன்னல் குறைப்பு நாள் உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. கோடிக்கணக்கான ஆண்டுகளாக சுழன்று கொண்டிருக்கும் இந்த பூமியானது, இன்று பல பேரிடர்களால் உருவாகும், மாபெரும் பிரச்சனைகளை சந்தித்துக் கொண்டிருக்கின்றது. நிலம், நீர், நெருப்பு, காற்று மற்றும் ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களை உள்ளடக்கி வியக்கத்தகு இயற்கை சூழலை பெற்றிருக்கும் இந்த பூமிக்கு மேலும் மதிப்பு கூட்டுகின்ற சிகரமாக மனித குலம் விளங்கி வருகின்றது. இயற்கையை கட்டிக் காக்க வேண்டிய இந்த மனிதகுலமே, தங்களின் சுயநலச் செயல்பாடுகளால் இந்த பேரழகு மிக்க புவியை பேரழிவிற்கு தள்ளிவிட்டிருக்கிறது.

பூமி வெப்பம் அடைந்து பருவநிலை மாறுவதால் உலகெங்கும் ஏற்படும் பேரழிவுகள், உலகின் பல்வேறு பகுதிகளில் ஏற்படும் நிலநடுக்கம், கடற்கரை பகுதிகளை தாக்கும் சுனாமி என்ற ஆழிப்பேரலை, நாட்டையே புரட்டிபோடும் புயல் காற்று, வெள்ளம், எரிமலை வெடித்தல் மற்றும் கொரோனா பெருந்தொற்று ஆகிய இயற்கை சீற்றங்களால் ஏற்படும் பேரழிவுகளும் அதோடு, மனிதர்களால் உருவாக்கப்படும் கலவரங்கள் மற்றும் நாடுகளுக்கு இடையே நடைபெறும் சண்டைகளாலும் உருவாகும் துயரங்களை எவ்வாறு குறைத்துக் கொள்வது என சிந்தித்து பார்ப்பதற்காகத்தான் இந்தப் பேரிடர் இன்னல் குறைப்பு தினமானது அனுசரிக்கப்படுகின்றது.

இயற்கை பேரிடர்களை தடுப்பது என்பது முடியாத ஒன்று. அதே வேளையில், இந்த பேரிடர்களால் ஏற்படும் பாதிப்புகளை குறைத்துக் கொள்ள முடியும். பேரிடர் காலங்களில் ஏற்படும் மனித உயிர்களின் இழப்பையும், வாழ்வாதாரங்களின் அழிவையும், கட்டமைப்புகளின் சேதங்களையும், சொத்துக்களின் அழிவையும் திட்டமிட்டு தடுப்பதன் மூலமாக பெரும் சிரமங்களில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் முதல் டிசம்பர் மாதம் வரை பருவமழை காலமாக இருப்பதால் புயல் மற்றும் வெள்ளம் போன்ற சீற்றங்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உள்ளது. இதனை நாம் அனுபவத்தில் கண்டிருக்கின்றோம். எனவே, திட்டமிடுவோம். பாதிப்புகளையும், துன்பங்களையும் குறைத்துக் கொள்வதன் மூலம் பேரிடர்களை எதிர்கொள்ள கற்றுக் கொள்வோம்.

இப்படிக்கு,

(எஸ்.சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் கலந்துரையாடல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 11.09.2020 அன்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பா. பென்ஜமின், சட்டமன்ற உறுப்பினர்கள், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பா. பொன்னையா, இ.ஆ.ப., செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. ஜான் லூயிஸ், இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு. வாலாஜாபாத் பா. கணேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் 22.09.2020 அன்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ, மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ஆர். பி. உதயகுமார், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் திரு. ஜி. பாஸ்கரன், சட்டமன்ற உறுப்பினர்கள், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கொ. வீர ராகவ ராவ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண். 110ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 16.09.2020 அன்று நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்காக தற்போது வழங்கப்படும் தண்டனைகளை மேலும் கடுமையாக்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படும் என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண். 110ன் கீழ் அறிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற உரை பின்வருமாறு...

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான நலம் பேணி, அவர்களின் உரிமைகளையும், பாதுகாப்பினையும் உறுதிப்படுத்த பல்வேறு முன்னோடித் திட்டங்கள் தீட்டி, செயல்படுத்தியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களில் பாலின விகித மேம்பாட்டினை உறுதி செய்வதற்காக பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், பெண் சிசுக் கொலையை ஒழிக்க, தொட்டில் குழந்தைத் திட்டம், பெண்கள் உயர்கல்வி கற்க ஊக்குவிக்கவும், ஏழ்மை நிலையிலுள்ள பெற்றோர்களின் மகள்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களின் திருமணத்திற்காக உதவித் தொகையுடன் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம், ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் பாதுகாப்புடன் தங்குவதற்கு அரசு சேவை இல்லங்கள், பணிபுரியும் மகளிர் இருசக்கர வாகனம் வாங்குவதற்கு மானியம் வழங்கும் அம்மா இருசக்கர வாகனத் திட்டம் ஆகிய வரலாற்றுச் சிறப்பு மிக்கத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பெண்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையிலும், பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை ஒழித்திடும் வகையிலும், முன்னோடியாக, 1992ம் ஆண்டில் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்டது. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த வழக்குகளை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மகளிர் விரைவு நீதிமன்றங்களை அமைக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இந்தியாவிலேயே முதன்முதலாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றத் தடுப்பு பிரிவு (Crime Against Women and Children Unit) ஒரு முன்னோடித் திட்டமாக 06.03.2019 முதல் தமிழ்நாட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் உருவாக்கப்பட்டு, சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றங்கள் நடைபெறாமல் தடுத்து, உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளும் நோக்கத்திற்காக, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றங்களை விசாரிக்கும் கண்காணிப்புப் பிரிவு (IUCAW), சிறப்பு சிறார் காவல் பிரிவு (SJU), வரதட்சணை தடுப்புப் பிரிவு, குழந்தைக் கடத்தல் தடுப்புப் பிரிவு (ACTU) ஆகிய அலகுகள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட 35 அனைத்து காவல் நிலையங்களுக்கும் நவீன வசதிகள் பொருத்திய ஊர்திகள், நிர்பயா நிதியின் கீழ் வழங்கப்பட்ட அம்மா ரோந்து வாகனம் மூலம் ரோந்துப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவற்றின்

வாயிலாக பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் எதிரான குற்றச் செயல்கள் தடுக்கப்பட்டு வருவதுடன், அவர்கள் போதை பொருட்களுக்கு அடிமையாதல் மற்றும் குழந்தை திருமணம் ஆகியவற்றைத் தடுக்க விழிப்புணர்வு பிரச்சாரமும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களில் தொடர்ந்து ஈடுபடுபவர்கள் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் (Goondas Act) கைது செய்யப்பட்டு வருகிறார்கள்.

அதுமட்டுமின்றி, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக காவலன் செயலி, மகளிர் உதவி எண் 181, குழந்தைகளுக்கான உதவி எண் 1098 போன்றவையும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, குற்றங்கள் வெகுவாக தடுக்கப்பட்டுள்ளன.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பினை மேலும் உறுதி செய்வதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு, 1860-ம் ஆண்டைய இந்திய தண்டனைச் சட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையை மேலும் கடுமையாக்கிட மத்திய அரசின் அனுமதி பெற்று கீழ்க்கண்ட சட்டத் திருத்தங்களை கொண்டு வர நடவடிக்கை எடுக்கும்.

பிரிவு 304-Bல் வரதட்சணை தொடர்பான மரணங்களுக்கு தற்போது வழங்கப்படும் குறைந்தபட்சம் ஏழு ஆண்டுகள் சிறை தண்டனையை, குறைந்தபட்சம் பத்து ஆண்டுகள் தண்டனையாக வழங்குதல்.

பிரிவு 354-Bல் குற்ற நோக்கத்துடன் (பெண்களின் ஆடைகளை களைதல்) செயல்படுவதற்கு தற்போது வழங்கப்படும் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் சிறை தண்டனையை, குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளாகவும், அதிகபட்சமாக வழங்கப்படும் ஏழு ஆண்டுகள் சிறை தண்டனையை கடுமையாக்கி பத்தாண்டுகளாகவும் வழங்குதல்.

பிரிவு 354-Dல் தவறான குற்ற நோக்கத்துடன் பெண்களை பின்தொடர்ந்தால், இரண்டாம் முறையும், தொடர்ந்தும் குற்றமிழைத்தால் தற்போது வழங்கப்படும் ஐந்தாண்டுகள் வரையிலான சிறை தண்டனையை, அதிகபட்சமாக ஏழு ஆண்டுகளாக்கவும்,

பிரிவு 372-ல் பாலியல் தொழிலுக்காக 18 வயதுக்குட்பட்ட நபர்களை விற்பனை செய்தல் மற்றும் பிரிவு 373-ல் பாலியல் தொழிலுக்காக 18 வயதுக்குட்பட்ட நபர்களை விலைக்கு வாங்குதல், தற்போது வழங்கப்படும் அதிகபட்சமான பத்தாண்டுகள் வரையிலான சிறை தண்டனைக்கு பதிலாக, குறைந்தபட்சம் ஏழு ஆண்டுகள் சிறை தண்டனையும், அதிகபட்சம் ஆயுள் தண்டனையும் வழங்குவதற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படும்.

மாண்புமிகு அம்மாவின் அரசு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு என்றென்றும் அரணாக தொடர்ந்து நின்று அவர்களை காக்கும் என உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

நாட்டிலேயே முதன்முறையாக செயல்திறன் அளவீட்டு முறையில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளும் திட்டம் துவக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 30.09.2020 அன்று, சென்னை, தீவுத்திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியின் 7 மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் நாட்டிலேயே முதன்முறையாக செயல்திறன் அளவீட்டு முறையில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளும் திட்டத்தை துவக்கி வைக்கும் அடையாளமாக, M/s. Urbaser SA and Sumeet Facilities Limited நிறுவனத்தின் காம்பாக்டர்கள், மெக்கானிக்கல் ஸ்வீப்பர், இ ரிக்ஷாக்கள் ஆகிய வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். உடன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி, மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ஆர். பி. உதயகுமார், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. பா. பென்ஜமின், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வேளாண் இயந்திர வாடகை மைய உபகரணங்கள் வழங்குதல்

தமிழகத்தில் உள்ள சிறு, குறு மகளிர் விவசாயிகள் நவீன முறையில் விவசாயம் மேற்கொள்ள ஏதுவாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் துறையின் மானிய உதவியுடன் ரூ. 10 இலட்சம் மதிப்பிலான பவர் டில்லர், களை எடுக்கும் இயந்திரம், நாற்று நடும் இயந்திரம், ஸ்பிரேயர் உள்ளிட்ட நவீன வேளாண் இயந்திரங்கள் வழங்கப்படும். இந்த இயந்திரங்களை வாடகைக்கு விட்டு அதன் மூலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வருவாய் பெறவும், நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி மகளிர் விவசாயிகள் வேளாண்மைத் தொழிலை மேற்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் அமைக்க தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கடனுதவிகள், மானிய உதவிகள், வேளாண் இயந்திரங்கள் போன்றவை வழங்கப்பட்டு வருகின்றன.

கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர் வட்டாரத்திற்குட்பட்ட பூலுவப்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் இக்கரை போளுவாம்பட்டி மற்றும் தேவராயபுரம் ஆகிய ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வேளாண் இயந்திர வாடகை மையம் அமைத்திட தலா ரூ. 10 இலட்சம் மதிப்பிலான வேளாண் இயந்திர வாடகை மைய உபகரணங்களை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் 12.09.2020 அன்று வழங்கினார்.

தொண்டாமுத்தூர் வட்டாரத்தில் வேளாண் இயந்திர வாடகை மையம் அமைத்திட வேளாண்மை பொறியியல் துறையுடன் இணைந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் செயல்படுத்திட கூட்டமைப்பின் பங்குத் தொகை ரூ. 50 ஆயிரம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் வழங்கப்படும் மானியத் தொகை ரூ. 1.50 இலட்சம் மற்றும் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் ரூ. 8 இலட்சம் என மொத்தம் ரூ. 10 இலட்சம் மதிப்பிலான உழுவை இயந்திரம், சுழல் கலப்பை, கொத்துக் கலப்பை, விசை களை எடுப்பான் மற்றும் விசை தெளிப்பான் ஆகிய வேளாண் உபகரணங்கள் இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. டி. இராமதுரை முருகன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத் திட்டத்தின் திட்ட இயக்குநர் திரு. கு. செல்வராசு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் (பொறுப்பு) திரு. ஜெ. ரூபன் சங்கர் ராஜ், உதவி இயக்குநர் பேரூராட்சிகள், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி திட்ட அலுவலர்கள், வட்டார இயக்க மேலாளர், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மாவட்ட வட்டார அளவிலான அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழக நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு, பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் *30.09.2020* அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகத் துறை, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறையில் கொரோனா நோய் தடுப்பு பணிகளின் நிலை, வடகிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், மற்றும் அனைத்து வளர்ச்சி பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டு துறை சார்ந்த அலுவலர்களிடம் விரைந்து நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்கள்.

தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, □பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் பொதுமுடக்கத்திற்கு பிறகு அரசு அலுவலகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் *100%* ஊழியர்களுடன் செயல்படுகின்றது. மேலும் தமிழக அரசின் உத்தரவின் பேரில் அனைத்து வழிப்பாட்டு தலங்களும் திறக்கப்பட்டுள்ளது. அங்கு கண்டிப்பாக முகக்கவசம் அணியவும், சமூக இடைவெளியை கடைபிடிக்கவும், அனைத்து அலுவலங்களில் கைகழுவும் இயந்திரம், கைசுத்திகரிப்பான், சோப்பு போன்றவற்றை பயன்படுத்தவும் மற்றும் ஊழியர்களுக்கு பரிசோதனை செய்யவும் நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (SOP) வழங்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

இதேபோன்று பிற மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் மேற்கோள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு முற்றிலும் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்' எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் *2020-21ல்* ரூ.14,000 கோடி வங்கி கடன் இணைப்பு, சுய உதவிக் குழுக்களுக்கு குறைந்தபட்சம் ரூ.10 லட்சம் சிறப்பு கடனுதவி (Covid-19- SHG Special Loan) வழங்கும் நிலை, சுய உதவிக் குழுக்களுக்கு கொரோனாவிற்காக வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட சிறப்பு கடனுதவி ஆகியவற்றின் நிலைப்பாடு குறித்து ஆய்வு மேற்கொண்டு விரைந்து சுய உதவி குழுக்கள் பயன் பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா இ.ஆ.ப., அவர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.த.ந.ஹரிஹரன், இ.ஆ.ப., அவர்கள், நகராட்சி நிர்வாக ஆணையாளர் திரு.கா.பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் சி.என்.மகேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் டாக்டர் கே.எஸ்.பழனிச்சாமி, இ.ஆ.ப., அவர்கள், பேரூராட்சிகள் இயக்குநர் திரு.எஸ்.பழனிச்சாமி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ.யு.சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய செயல் இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், இ.ஆ.ப., அவர்கள் உட்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்டம்

சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு வங்கிக் கடனுதவிகள் வழங்குதல் மற்றும் ஆவின் பாலகம் திறப்பு விழா

ஈரோடு மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வங்கிக் கடனுதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. செங்கோட்டையன் அவர்களும், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே. சி. கருப்பணன் அவர்களும் கலந்து கொண்டு, ஈரோடு மாவட்டம் தொப்பம்பாளையம், பெரிய புலியூர், வாய்ப்பாடி, பாரியூர், நஞ்சை கொளாநல்லி, பெருந்தலையூர், குருவரெட்டியூர் உள்ளிட்ட 8 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வங்கி பெருங்கடனாக ரூ.2.49 கோடிக்கான காசோலைகளையும், புஞ்சை துறையம்பாளையம், ஓடத்துறை, புங்கம்பாடி, இச்சிபாளையம், பெருந்துறை, பிரம்மதேசம், மேட்டு நாசுவம்பாளையம், வெள்ளாளபாளையம், கோட்டுப்புள்ளாம் பாளையம் உள்ளிட்ட 10 ஊராட்சிகளைச் சேர்ந்த 117 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நேரடி வங்கி கடனுக்காக ரூ.7.48 கோடிக்கான காசோலைகளையும் வழங்கினார்கள்.

மேலும் புதிதாக அமைக்கப்பட்ட 292 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதியாக ரூ.43.80 இலட்சம், பிரதம மந்திரியின் தெருவோர வியாபாரிகளுக்கான சுயசார்பு நிதி வழங்கும் திட்டத்தின் கீழ் கடனுதவியாக 507 பயனாளிகளுக்கு ரூ.50.70 இலட்சம், 104 உழைக்கும் மகளிருக்கு ரூ.26 இலட்சம் மதிப்பிலான மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்களையும் வழங்கினார்கள்.

முன்னதாக, ஈரோடு மாநகராட்சி, பன்னீர்செல்வம் பூங்கா அருகில் மகளிர் சுய உதவிக் குழுவின் மூலம் புதிதாக துவங்கப்பட்ட ஆவின் விற்பனை நிலையத்தினை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திறந்து வைத்து, முதல் விற்பனையை தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. ச. கவிதா, வருவாய் அலுவலர் / பொது மேலாளர் (ஆவின்) திருமதி. பி.சுபாநந்தினி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பி. தங்கதுரை, ஈரோடு மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர் திரு. ஆ.சீனிவாசன், உதவி திட்ட அலுவலர்கள் திரு.ச.முத்துக்குமாரசுவாமி, திருமதி.இரா.சாந்தா, திருமதி.தா.செல்லம், திரு.பா. அன்பழகன், திரு.கு.சம்பத்குமார், திரு.கி.பாஸ்கர், திரு.சி.சரவண குமார், பல்வேறு துறை அலுவலர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவினர் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழக நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு, பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் 05.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் திரு.ஹன்ஸ்ராஜ் வர்மா இ.ஆ.ப., அவர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.த.ந.ஹரிஹரன், இ.ஆ.ப., அவர்கள், நகராட்சி நிர்வாக ஆணையாளர் திரு.கா.பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் டாக்டர் கே.எஸ்.பழனிச்சாமி, இ.ஆ.ப., அவர்கள், பேரூராட்சிகள் இயக்குநர் திரு.எஸ்.பழனிச்சாமி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ.யு.சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய செயல் இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், இ.ஆ.ப., அவர்கள் உட்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழக நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம்

நம்பிக்கை சுய உதவிக் குழுவின் நர்சரி கார்டன் திறப்பு விழா

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 2020-2021ம் ஆண்டிற்கான சிறப்பு குழுக்கள் அமைப்பதில் மதுரை மாநகராட்சி மிகவும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இதுவரை 149 சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. SC-79, ST-3, PWD-7, Widow-30, Weavers-2 மற்றும் இதர குழுக்கள் 28 போன்றவையாகும். மதுரை மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் / திட்ட இயக்குநர் அவர்கள் சிறப்பு குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். மதுரையில் உள்ள மனநலம் குன்றியோருக்காக 7 சிறப்புக் குழுக்கள் மனநல துறையில் அனுபவமிக்க சமுதாய அமைப்பாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

மனநலம் குன்றியவர்களின் வாழ்க்கையில் நம்பிக்கை அடைந்திடவும், அவர்கள் மறுவாழ்வு பெற்றிடவும், அவர்கள் பெற்றோர்களின் உதவியுடன், எம்.எஸ்.செல்லமுத்து அறக்கட்டளையின் மனநல மருத்துவர் டாக்டர். சி. ராமசுப்பிரமணியன் அவர்களிடம், மதுரை மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் / திட்ட இயக்குநர் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டார்.

மாவட்ட ஒருங்கிணைப்பு குழு ஆலோசனையின்படி அவர்களுக்கென்று தனித்துவம் வாய்ந்த நர்சரி கார்டன் துவங்குவது தொடர்பாக விவாதிக்கப்பட்டது. அதற்கு தேவையான ஆரம்ப கட்ட முதலீடாக ஒரு லட்சம் ரூபாயினை வழங்க நம்பிக்கை உறுப்பினர்கள் முன்வந்தனர். அதன் தொடர்ச்சியாக மதுரை மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்க மேலாண்மை அலகு வளாகத்தில் நர்சரி கார்டன் அமைத்து அதற்கு "நம்பிக்கை நர்சரி கார்டன்" என்ற பெயரிடப்பட்டு உள்ளது. இந்த நம்பிக்கை நர்சரி கார்டனை 03.10.2020 அன்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜு அவர்கள் துவக்கி வைத்து, 32 சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதியாக ரூ. 3,20,000/ மும், அம்மா இருசக்கர வாகன மானியமும் வழங்கி விழாப் பேருரையாற்றினார்கள்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். டி. ஜி. வினய், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில், மனநல மருத்துவர் டாக்டர். சி. ராமசுப்பிரமணியன் அவர்கள் விளக்கவுரையாற்றும் போது, "நம்பிக்கை சிறப்பு குழு உறுப்பினர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகள் மற்றும் மறுவாழ்வு பயிற்சிகள் போன்றவை தங்கள் நிறுவனத்தின் மூலம் வழங்க தயாராக உள்ளதாகத்" தெரிவித்தார்.

இந்த நர்சரி கார்டனில் அனைத்துவிதமான மரக்கன்றுகள், பழமரக் கன்றுகள், அழகு பூச்செடிகள், உரங்கள், விதைகள் போன்றவை விற்பனை செய்வதுடன், மாடித் தோட்டங்கள் அமைத்துக் கொடுத்தல் போன்றவையும் செய்து வருகின்றனர். மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களை சேர்ந்தவர்கள் இந்த நர்சரி கார்டனில் வேலை செய்வதால் அவர்கள் பொருளாதார ரீதியாக முன்னேற்றமும் அடைந்து வருகின்றனர்.

துவக்க விழா நடைபெற்ற நாளில் மட்டும் ரூ.19,800/ மதிப்புள்ள செடிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

விழுப்புரம் மாவட்டம்

சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு வங்கிக் கடனுதவிகள் வழங்குதல்

விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் 23.09.2020 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு. சி. வி. சண்முகம் அவர்கள் கலந்து கொண்டு, 20 சுய உதவிக் குழுக்களுக்கு நேரடிக் கடனாக ரூ. 119.95 இலட்சமும், 3 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 89 இலட்சம் கடனுதவியும் மற்றும் நலத் திட்ட உதவிகளும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆ. அண்ணாதுரை, இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப., மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் திரு. எஸ். இராதாகிருஷ்ணன், இ.கா.ப., பல்வேறு துறை அரசு அலுவலர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

செங்கல்பட்டு மாவட்டம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்கும் விழா



செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டாரம், திருமணி ஊராட்சியில் அம்மா நகரும் நியாய விலைக் கடைகள் திறப்பு விழா, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜான் லூயிஸ் இ.ஆ.ப., அவர்களின் முன்னிலையில், மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு. பா. பென்ஜமின் அவர்களின் தலைமையில் 24.09.2020 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக வண்ணமயில் மகளிர் சுய உதவிக் குழு மற்றும் மல்லிகை மகளிர் சுய உதவிக் குழு ஆகியவற்றுக்கு தலா ரூ.10 இலட்சம் வீதம் வங்கி நேரடி கடனாக ரூ. 20 இலட்சமும், ஸ்ரீ பெரியாண்டவர் மகளிர் சுய உதவிக் குழு மற்றும் அன்னை தெரேசா மகளிர் சுய உதவிக்குழு ஆகியவற்றுக்கு தலா ரூ.50,000/- வீதம் சமுதாய முதலீட்டு நிதியாக ரூபாய் ஒரு இலட்சமும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், ஊரக புத்தாக்க திட்ட மாவட்ட செயல் அலுவலர் மற்றும் மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வேலூர்
மாவட்டம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் மற்றும் சிறந்த வங்கியாளர்களுக்கான விருதுகள் வழங்கும் விழா

வேலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்கும் விழா மற்றும் சிறந்த வங்கியாளர்களுக்கான விருதுகள் வழங்கும் விழா 01.10.2020 அன்று வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது.

வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. சண்முகசுந்தரம், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. கே. சி. வீரமணி அவர்களும், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர். நிலோபர் கபீல் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு 960 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 54.24 கோடி வங்கிக் கடன் உதவியும், 3 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ. 1.41 கோடி வங்கிப் பெருங்கடனும் மற்றும் நலத்திட்ட உதவிகளையும், 2019-20ஆம் ஆண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அதிகப்படியாக கடன் உதவி வழங்கிய வங்கியாளர்களுக்கு விருதுகளையும் வழங்கி விழாவை சிறப்பித்தனர். முன்னதாக வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஆ. ரா. சிவராமன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இவ்விழாவில் வேலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு சங்கத்தின் தலைவர் திரு. ராமு, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. பி. ஜான் தியோடோசியஸ், வங்கிகளின் பிரதிநிதிகள், உதவித் திட்ட அலுவலர்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

ஊட்டச்சத்துத் தோட்டம் அமைக்க காய்கறி விதைகள் வழங்குதல்

திருப்பத்தூர்
மாவட்டம்

திருப்பத்தூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலமாக ஆண்டு செயல் திட்டம் செயல்படுத்தப்படும் திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, கந்திலி, நாட்றம்பள்ளி மற்றும் மாதனூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 181 ஊராட்சிகளில் உள்ள 9050 சுய உதவிக் குழு மகளிருக்கு ஊட்டச்சத்து காய்கறி விதைகள் வழங்கும் நிகழ்ச்சியானது 09.10.2020 அன்று ஜோலார்பேட்டை ஒன்றியம், ஒட்டப்பட்டி ஊராட்சியில் நடைபெற்றது. திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. ப. சிவன் அருள், இ.ஆ.ப., அவர்கள் இந்நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று, சுய உதவிக் குழு மகளிருக்கு ஊட்டச் சத்து காய்கறி விதைகளை வழங்கி திட்டத்தினைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் திருப்பத்தூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் டாக்டர். எஸ். உமாமகேஸ்வரி, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. சங்கர், உதவித் திட்ட அலுவலர்கள் திரு. பழனி, திரு, கலைச்செல்வன், மகளிர் திட்ட பணியாளர்கள் மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

தேசிய ஊரக புத்தாக்கத் திட்டம் குறித்த ஆய்வுக் கூட்டம்

மத்திய அரசின் தேசிய இயக்க மேலாண்மை அலகின் சார்பாக, தேசிய ஊரக புத்தாக்கத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் 07.10.2020 அன்று சென்னை அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தலைமையகத்தில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றது. இந்த ஆய்வுக் குழுக் கூட்டத்தில். தேசிய ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் செயல்பாடுகள், முன்னேற்றங்கள் மற்றும் சாதனைகள் குறித்து காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மாவட்ட அளவிலான ஆய்வுக்குழு கூட்டம் (DLRC)

செங்கல்பட்டு மாவட்டம்

செங்கல்பட்டு மாவட்டத்தில் மாவட்ட அளவிலான ஆய்வுக்குழுக் கூட்டம் (DLRC) 26.09.2020 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜான் லூயிஸ் இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இவ்வாய்வுக் கூட்டத்தில் செங்கல்பட்டு மாவட்டம் துவங்கப்பட்டு, முதல் மாவட்ட ஆண்டு நிதித் திட்டம் 2020-21 (District Annual Credit Plan-2020-21) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வெளியிடப்பட்டது.

கொரோனா பாதிப்பு உள்ள இந்த சமயத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் COVID-19 சிறப்புக் கடனுதவி மற்றும் வங்கி நேரடிக் கடன்களின் முக்கியத்துவம் மற்றும் அத்தியாவசியம் குறித்து வங்கியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் எடுத்துரைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மாவட்ட செயல் அலுவலர், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், பல்வேறு வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பிற அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம்

மாவட்ட அளவிலான வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் ஆய்வு கூட்டம்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 25.09.2020 அன்று மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் ஒருங்கிணைப்பு கூட்டம் District Level Consultalive Committee (DLCC), ஆய்வு கூட்டம் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். ஜெயச்சந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசின் பல்வேறு துறைகளில் வங்கிகளின் மூலம் வழங்கப்படும் கடன் உதவி திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் நிலுவை விண்ணப்பங்களை ஆய்வு செய்து இலக்கினை

எய்திட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. தொடர்ந்து சுய உதவி குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு வழங்கிட சிறப்பாக செயல்பட்ட வங்கியாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ், கேடயம் மற்றும் ரொக்கப் பரிசுகளும், IIBF பயிற்சி முடித்த சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கு பயிற்சி சான்றிதழ்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில் கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. பெரியசாமி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் (LDM) திரு. மகேந்திரன், இந்தியன் வங்கியின் மண்டல மேலாளர் திரு. திருமாவளவன் மற்றும் நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் (DDM) திருமதி. நஸ்ரீன் சலீம், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மனம் இனிது திட்டத்தின் கீழ் ToT Non-Residential Training to Barefoot Counsellors (BFCs) பயிற்சி

தஞ்சாவூர் மாவட்டம்

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு மூலமாக தேர்வு செய்யப்பட்ட சமுதாய வள நபர்களுக்கு 21.09.2020 முதல் 25.09.2020 வரை ஐந்து நாட்கள் மனம் இனிது திட்டத்தின் கீழ் ToT Non-Residential Training to Barefoot Counsellors (BFCs) பயிற்சி நடைபெற்றது.

இந்தப் பயிற்சியினை 21.09.2020 அன்று தஞ்சாவூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. சு. கதிரேசன் அவர்கள் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் பேராவூரணி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் திரு. தன்ராஜ், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் திரு. ப. குணசேகர்,

திரு. பி. மனுநீதிசோழன், திரு. கோடீஸ்வர ராவ், (துணை இயக்குநர், Scarf india) மற்றும் பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர்.

அரியலூர் மாவட்டம்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் ஆய்வு

அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திரு.ஜே.கணேஷ் கண்ணா அவர்கள் தலைமையிலான ஆய்வுக் குழுவினர் 08.10.2020 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வில் அரியலூர் ஊராட்சி ஒன்றியம் வெங்கடகிருஷ்ணாபுரம் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு, கயர்லாபாத் ஊராட்சி கிராம வறுமை ஒழிப்பு சங்கம் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு மற்றும் வேளாண் இயந்திரங்கள் வாடகை மையம் (CHC) போன்றவை நேரில் பார்வையிடப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது

தொடர்ந்து அரியலூர் மாவட்ட ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில் (RSETI) உணவு பொருள்கள் தயாரித்தல் பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் அரியலூர் ஊராட்சி ஒன்றியம் காட்டுபிரிங்கியம் ஊராட்சியில் செயல்படும் ரோஜா மகளிர் சுய உதவிக் குழுவிற்கு வங்கி கடன் இணைப்பு ஆகியவையும் கூடுதல் இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளின்போது, தலைமை அலுவலக முதுநிலை ஆலோசகர் (நிதி உள்ளாக்கம்), திரு. திருநாவுக்கரசு, வாழ்வாதார வல்லுநர் திரு. சுந்தரேஸ்வரன், அரியலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் (பொ) திரு.சு.சுந்தர்ராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்டம் ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட மனநல திட்டம் இணைந்து மண்டபம் ஒன்றியத்திலுள்ள மனம் இனிது திட்டத்தின் ஆலோசகர்களுக்கு (Barefoot Counsellor) உலக மனநாள் தொடர்பான ஒருநாள் சிறப்பு பயிற்சி டாக்டர். பெரியார் லெனின் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் கள அளவில் மனம் இனிது (BFC) எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்தும் மனம் இனிது தொடர்பான நினைவூட்டல் பயிற்சியாகவும் இக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மனநலம் மற்றும் மனநோய், சமூக மனநலம் சார்ந்த திட்டங்கள், மனநல திட்டத்தின் செயல்பாடுகள், குழந்தைகள் மற்றும் வளரும் இளம் பருவத்தினருக்கான மனநல பிரச்சினைகள், போதை மற்றும் மதுவுக்கு அடிமை, முதியோருக்கு ஏற்படும் மனநோய் மற்றும் மறதி நோய் மற்றும் தற்கொலையும் தடுப்பு முறையும் போன்ற தலைப்புகளில் வல்லுநர்கள் உரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் மகளிர் திட்டத்தின் உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சுய உதவிக் குழுக்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கும் சமுதாய முதலீட்டு நிதி

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மாவட்ட திட்ட செயலாக்க அலகுகள் மூலம் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன்படி பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகின்றன. ஓர் ஊராட்சியிலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை கண்காணித்தல், குடியிருப்பு மன்றங்கள் மற்றும் துணைக் குழுக்களை உருவாக்கி, வலுப்படுத்தி அவற்றின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் அவைகளின் உறுப்பினர்களுக்குத் தேவையான நிதி உதவிகள் (வங்கி கடன் இணைப்பு மற்றும் திட்ட நிதி) மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை உருவாக்குதல் ஆகியவை ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் தலையாய பணிகள் ஆகும்.

2014-15ஆம் ஆண்டு முதல் மாநில இயக்க மேலாண்மை அலகிலிருந்து மாவட்ட இயக்க மேலாண்மை அலகிற்கும் அங்கிருந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும் நிதி விடுவிக்கப்படுகிறது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலிருந்து சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு நிதி வழங்கப்படும்.

சமுதாய முதலீட்டு நிதிக்கான வழிகாட்டி நெறிமுறைகள்

சமுதாய முதலீட்டு நிதி என்பது பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளும் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நிதியாகும். ஊராட்சி அளவில், சமுதாய முதலீட்டு நிதி விடுவிக்கும் பொறுப்பு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையே சேரும். இந்த நிதியானது அதிகபட்சமாக ஒரு சுய உதவிக் குழுவிற்கு ரூ.50,000/ வீதம் திட்ட நிதியிலிருந்து பொருளாதார நடவடிக்கைகளுக்காக மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

சமுதாய முதலீட்டு நிதி பெறுவதற்கான தகுதிகள்

- 6 மாதங்கள் முடிவடைந்த பஞ்ச சூத்திரங்களை முறையாக பின்பற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள்.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்கள்
- முன்னுரிமை பெற்ற மாற்றுத் திறனாளி குழு மற்றும் முதியோர் சுய உதவிக் குழுகள்
- சுழல் நிதி பெற்று முறையாக உள்கடன்களை சுழற்சி முறையில் உறுப்பினர்களுக்கு வழங்கும் சுய உதவிக் குழுக்கள்.
- உள்கடனை முறையாக திருப்பி செலுத்தும் சுய உதவிக் குழு உறுப்பினர்கள்
- நுண்நிதி கடன் திட்டம் கடன் தயாரித்த சுய உதவிக் குழுக்கள்

சமுதாய முதலீட்டு நிதி வழங்கும் விதம்

- மாவட்ட இயக்க மேலாண்மை அலகு சமுதாய முதலீட்டு நிதியினை வழங்க ஊராட்சி அளவிலான கூட்டமைப்புடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு 9% வட்டியுடன் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்க வேண்டும். சுய உதவிக் குழுவானது உறுப்பினர்களுக்கு 12% வட்டியில் கடன் வழங்க வேண்டும்.
- ஒவ்வொரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலும் சமுதாய முதலீட்டு நிதி கணக்கு என்ற தலைப்பில் தனியாக சேமிப்பு வங்கிக் கணக்கு பராமரிக்கப்பட வேண்டும்.
- கடன் வழங்கப்பட்ட தொழிலின் அடிப்படையில் 12 முதல் 24 சம தவணைகளில் திரும்ப பெறுதல் வேண்டும்.
- சமுதாய முதலீட்டு நிதியினை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்களிடையே சுழற்சி முறையில் கடன் வழங்கியிருக்க வேண்டும், மாறாக வங்கி சேமிப்பு கணக்கிலேயே செயலற்று இருத்தல் கூடாது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் பராமரிக்க வேண்டிய பதிவேடுகள்

- ரொக்கப் பதிவேடு
- பொதுப் பேரேடு
- கடன் பேரேடு
- கடன் கண்காணிப்பு பதிவேடு

சமுதாய முதலீட்டு நிதிக்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு பாதுகாவலராக செயல்பட்டு, 100% கடனை திருப்பி செலுத்துதல், முறையான பயன்பாடு, நிதியினை சுழற்சி முறையில் வழங்குதல் ஆகியவற்றை உறுதி செய்யும் சமுதாயம் சார்ந்த அமைப்பாக விளங்குகிறது.

சிறப்பு கட்டுரை

உயிர்களைக் காக்கும் இரத்த தானம்...

தானத்தில் சிறந்தது அன்னதானம் என்பர் சிலர். சிலர் கல்விதானம் என்பர். சிலர் ரத்ததானம் என்பர். தற்போது பெரும்பாலானோர் கூறுவது உடல்உறுப்பு தானம். ஆனாலும் எல்லாவற்றிற்கும் மேலாக நாம் உயிரோடு இருப்பதற்கு அவசியமானது ரத்தம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

இரத்தம் மனிதனின் வாழ்கையில் மிகவும் உயரிய பரிசாகும். இரத்தத்திற்கு மாற்று எதுவும் இல்லை. ஒவ்வொரு ஆண்டும் 1 மில்லியனுக்கும் மேல் புற்றுநோய் கண்டறியப்படுகிறது. இரத்தம் இவர்களில் பலருக்கு தேவைப்படலாம். கீமோதெரபி சிகிச்சையின் போது தினமும் தேவைப்படும். வாகன விபத்தில் பாதிக்கப்படுபவர்களுக்கு அதிக அளவிலான இரத்தம் தேவைப்படலாம்.

நம் நாட்டில், ஒவ்வொரு இரண்டு நொடியிலும் ஒருவருக்கு ரத்தம் தேவைப்படுகிறது. அதாவது, ஆண்டுக்கு, 4 கோடி யூனிட் ரத்தம் தேவைப்படுகிறது. ஆனால், ஓர் ஆண்டில் சராசரியாகப் பெறப்படுவது, வெறும், 40 லட்சம் யூனிட் ரத்தம் தான். இந்த பற்றாக்குறையால், ஒவ்வொரு நாளும் விபத்தில் பாதிக்கப்படுவோர், கர்ப்பிணிகள், புற்றுநோய் உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்டோர் என, பலரை காப்பாற்ற முடியாமல் போகிறது. ரத்தம் கிடைக்காமல், ஒவ்வொரு நாளும், ஆயிரக்கணக்கான அறுவை சிகிச்சைகள் தள்ளி வைக்கப்படுகின்றன.

மனித ரத்தத்துக்கு மாற்று எதுவுமில்லை. உடலில் ஓடும் உயிர்த் திரவம் ரத்தம். மனித உடலில் சராசரியாக 5 லிட்டர் ரத்தம் இருக்கும். ரத்த தானத்தின் போது 350 மில்லி மட்டுமே எடுக்கப்படுகிறது. ஒருவர் தானமாகக் கொடுக்கும் ரத்தத்தின் மூலம் 3 பேரைக் காப்பாற்ற முடியும். கொடையாளி அளிக்கும் ரத்தம் சிவப்பணுக்கள், வெள்ளையணுக்கள், தட்டணுக்கள் என்று மூன்றாகப் பிரிக்கப்படுகிறது. இவற்றைத் தனித்தனியாகப் பெறும் நோயாளிகள் மூவர், காப்பாற்றப்படுகின்றனர்.

இரத்த தானம் செய்வது பிறர் நலன் காப்பதற்கு மட்டுமல்ல தன் நலன் மேம்படுவதற்கும் உதவும். இரத்த தானம் செய்வது இயற்கையாக புதிய இரத்தம் உடலில் ஏற்றப்படுவதற்குச் சமம். தற்போதைய பல்வேறு ஆய்வுகளில் தொடர்ச்சியாக இரத்த தானம் செய்பவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு குறைவு என்று கண்டறியப்பட்டுள்ளது. இரத்ததானம் செய்வதன் மூலம் ஹீமோகுளோபின் அளவினை கட்டுப்படுத்தவும், சமச்சீராக பராமரிக்கவும், இரத்த அழுத்தத்தினை சீராக வைத்திருக்கவும் முடியும். இதன் மூலம் பலவிதமான நோய்கள் தவிர்க்கப்படுகின்றது.

இரத்ததானம் செய்வதற்கு 10 நிமிடம் மட்டுமே தேவை. இரத்த தானத்திற்குப் பிறகு 20 நிமிடங்கள் ஓய்வு எடுத்தால் போதுமானது. ஒருமுறைக்கு 350 மில்லி (நம் உடலில் 5 லிட்டர் இரத்தம் உள்ளது) அளவிலான ரத்தம் மட்டுமே எடுக்கப்படுகிறது. இந்த இரத்தமும் 10 லிருந்து 21 நாட்களில் திரும்ப உடலில் உற்பத்தி ஆகிவிடும்.

ரத்த தானம் செய்வதற்கான விதிகள்

- இரத்த தானம் செய்பவரின் வயது 18 வயது நிரம்பியவராகவும் 60 வயதினை மிகாதவராகவும் இருத்தல் அவசியம்.
- இரத்த ஹீமோகுளோபின் அளவு 12 கிராமிற்கு குறையாமலும் 16 கிராமிற்கு மிகாமலும் இருக்க வேண்டும்.
- இரத்த தானம் செய்பவரின் எடை 50 கிலோவிற்கு குறையாமல் இருக்க வேண்டும்.
- உடலின் வெப்பநிலை 37.5 டிகிரி செல்சியஸுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- ஆண், பெண் இருபாலரும் இரத்த தானம் செய்ய தகுதியுடையவர்கள்.
- நன்றாக உணவு சாப்பிட்டு, பின் ஒன்றரை மணிநேரம் கழித்து இரத்த தானம் செய்வது நல்லது.
- தானம் செய்வதற்கு முன் மோர் போன்ற திரவங்களைக் குடிப்பது நல்லது.
- இரத்த தானம் செய்பவர் நன்கு உணவு உண்ட பிறகே இரத்த தானம் செய்யவேண்டும். போதிய உணவு, உறக்கம் இரண்டும் மிகவும் அவசியம்.
- இரத்த தானம் செய்வதற்கு முன்பு கைகளை நன்கு சுத்தம் செய்வது அவசியம்.
- இரத்த தானம் தொடர்ச்சியாக செய்ய விரும்புபவர் குறைந்தது 3 மாத இடைவெளிக்குப் பிறகே இரத்த தானம் செய்ய வேண்டும்.
- இரத்த தானம் செய்தவுடன் கைகளை நன்றாக மடக்கி மேலே உயர்த்திப் பிடிக்க வேண்டும். குறைந்தது ஒரு மணி நேரத்திற்கு பளுவுள்ள பொருட்களை தூக்குவது போன்ற கடினமான வேலைகளைத் தவிர்க்க வேண்டும்.

- நல்ல திரவ உணவை அருந்துங்கள். ஹெவி உணவு வேண்டாம்.

இரத்த தானம் செய்யக் கூடாதவர்கள்

- டைபாய்டு, மலேரியா போன்ற காய்ச்சல் வந்தவர்கள், சிகிச்சை பெற்று ஆறு மாதங்கள் வரை ரத்தத் தானம் செய்யக் கூடாது.
- மது அருந்தியவர்கள் இரத்த தானம் செய்ய முடியாது. மது அருந்தியதில் இருந்து 24 மணி நேரம் ஆகியிருத்தல் அவசியம்.
- புகைப்பிடித்திருப்பின் குறைந்தது ஒரு மணி நேரத்திற்குப் பிறகு இரத்த தானம் செய்வது சிறந்தது. இரத்த தானம் செய்த பிறகு ஒரு மணிநேரம் கழிந்த பிறகே புகைப் பிடிப்பது நல்லது. அதற்கு முன்பே புகைப் பிடிப்பது மயக்கம் ஏற்படுதல் போன்ற பாதிப்புகளை உருவாக்கும்.
- மாதவிடாய் தொடங்கி 5 நாட்கள் வரை ரத்தம் தரக்கூடாது, கர்ப்பிணிகள், தாய்ப்பால் அளிக்கும் பெண்கள் ஓராண்டு வரை ரத்த தானம் செய்யக்கூடாது.
- எச்.ஐ.வி., மஞ்சள் காமாலை தொற்றுள்ளவர்களின் ரத்தத்தைப் பெறக்கூடாது.
- இதயநோய், காசநோய், வலிப்பு நோய் உடையவர்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள், புற்றுநோயாளிகள் எப்போதும் ரத்த தானம் செய்யக்கூடாது.

எப்படி ரத்தம் சேகரிக்கப்படுகிறது?

முதலில் ரத்தக் கொடையாளர்களிடம் தொடர்ந்து மாத்திரைகள் எடுத்துக் கொள்பவரா, இரவு தூங்கினீர்களா, மது அருந்தியுள்ளீர்களா உள்ளிட்ட 20 அடிப்படைக் கேள்விகள் கேட்கப்படும். அடுத்ததாக ஹீமோகுளோபின், ரத்த அழுத்தம், இதயத்துடிப்பு ஆகியவற்றின் அளவு சரிபார்க்கப்படும்.

அதைத் தொடர்ந்து கொடையாளியிடம் இருந்து 350 மில்லி லிட்டர் ரத்தம் எடுக்கப்படும். அதில் 3 மில்லியை எடுத்துத் தனி ரத்தப் பையில் சேகரித்து, அதை சோதனைக் குழாயில் செலுத்தி, எச்.ஐ.வி (எய்ட்ஸ்), ஹெபடைடிஸ் பி (மஞ்சள் காமாலை), ஹெபடைடிஸ் சி (மஞ்சள் காமாலை), பால்வினை நோய் மற்றும் மலேரியா ஆகிய நோய்களின் தாக்குதல் குறித்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

சோதனையின் முடிவு பாஸிட்டிவ் என வந்தால் சம்பந்தப்பட்ட சோதனைக்குழாயையும், ரத்தம் சேகரித்த பையையும் பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்தி விட வேண்டும். பின்பு கொடையாளரை அழைத்துப் பேசி, உரிய மருத்துவ சிகிச்சை பெற ஆலோசனை வழங்க வேண்டும்.

பரிசோதனையின் முடிவு நெகட்டிவ் என வந்தால், பரிசோதிக்கப்பட்ட பைகள் என்று முத்திரை குத்தப்படும். அவற்றை ரத்தம் வழங்கும் இடத்துக்கு மாற்றலாம். பரிசோதனை செய்யப்படாத ரத்தப் பைகள் பரிசோதிக்கப்படாதவை என்ற பட்டியலில் வைக்கப்பட்டு, குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்படும்.

தற்போது நவீன தொழில்நுட்பத்தின் வாயிலான ரத்தத்தில் உள்ள செல்களைத் தனித்தனியே பிரித்து பாதுகாக்கும் முறை வந்துவிட்டது. அதாவது ரத்தத்தில் உள்ள சிவப்பணு, வெள்ளை அணு, ரத்தத்தை உறைய வைக்கும் செல், பிளாஸ்மா என எல்லாவற்றையும் தனித்தனியே பிரித்தெடுத்து அவற்றை பாதுகாத்து வைக்கலாம். ரத்த வங்கிகள் தாங்கள் பெறும் ரத்தத்தில் 85 விழுக்காடு ரத்தத்தை இப்படி பிரித்துத்தான் பாதுகாக்கின்றன.

ஏனெனில் ரத்தம் தேவைப்படும் நோயாளிகளில் பலருக்கு முழு ரத்தமும் தேவைப்படாது. உதாரணத்திற்கு, ஹீமோகுளோபின் குறைவாக இருக்கும் நோயாளிகளுக்கு சிவப்பணுக்கள் மட்டுமே தேவைப்படும். தீ விபத்தில் சிக்கியவர்களுக்கு பிளாஸ்மா செல்கள் மட்டுமே தேவைப்படும். விபத்தில் ரத்தக் கசிவு ஏற்பட்டு ரத்தம் உறையாதவர்களுக்கு ரத்தத்தை உறைய வைக்கும் செல்கள் மட்டுமே தேவைப்படும். அந்த சமயங்களில் நோயாளிக்குத் தேவையான ரத்தத்தில் இருந்து தனித்தனியே பிரித்து வைக்கப்பட்டிருக்கும் செல்கள் மட்டும் அவர்களுக்கு அளிக்கப்படும். எனவே ஒருவர் அளிக்கும் ரத்தத்தின் மூலமாக பலர் பயனடையும் வாய்ப்பு ஏற்படுகிறது.

நமக்கு இருப்பதை இல்லாதோர்க்கு கொடுத்து உதவும் செயலை தானம் என்று சொல்கிறோம். எந்த பிரதி உபகாரமும் எதிர்பார்க்காமல் மற்றவர்களுக்கு நாம் எதைக் கொடுத்தாலும் அது தானம்தான். ஒருவரது பசியைப் போக்குவது அன்னதானம். ஒருவருக்கு பார்வை கொடுப்பது கண் தானம். ஆனால் ஒருவருக்கு உயிரையே கொடுக்கலாம் ரத்த தானத்தின் மூலமாக. எனவே ரத்தத்தை தானமாக அளிப்போம். உயிர்களைக் காப்பாற்றுவோம்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
Empowering Lives

நகர்ப்புறங்களில் உள்ள தெருவோர வியாபாரிகளுக்கு பயனளிக்கும் “பிரதம மந்திரி ஆத்ம நிர்பார் (PM-SVANidhi)” (தெருவோர வியாபாரிகளுக்கான சுய சார்பு திட்டம்)

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை மக்களின் வறுமையைப் போக்கிட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் பதிவு செய்துள்ள நகர்ப்புற தெருவோர வியாபாரிகளின் பொருளாதார வளர்ச்சிக்காக அவர்களுக்கு கடன் வழங்கும் வகையில் பிரதம மந்திரி ஆத்ம நிர்பார் (PM-SVANidhi) (தெருவோர வியாபாரிகளுக்கான சுய சார்பு திட்டம்) என்ற பெயரில் புதிய திட்டம் துவங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் ரூ.10,000/ கடனாக வழங்கப்படும். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் குறிப்பாக தெருவோர வியாபாரிகள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்து வருகிறார்கள்.

பிரதம மந்திரி ஆத்ம நிர்பார் (PM-SVANidhi) திட்டத்தின் கீழ் தெருவோர வியாபாரிகளுக்கு வங்கி கடன் வழங்கிட சிறப்பு வங்கியாளர்கள் கூட்டம்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு பிரதம மந்திரி ஆத்ம நிர்பார் (PM-SVANidhi) திட்டத்தின் கீழ் கடனுதவி வழங்கிட மாவட்ட அளவிலான சிறப்பு வங்கியாளர்கள் கூட்டம் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்ட அரங்கில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருவள்ளூர் மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. வை. ஜெயக்குமார், முன்னோடி வங்கி மேலாளர், உதவித் திட்ட அலுவலர்கள், அனைத்து வங்கி மேலாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம்

» கடலூர் மாவட்டம்

கடலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு பிரதம மந்திரி ஆத்ம நிர்பார் (PM-SVANidhi) திட்டத்தின் கீழ் கடனுதவி வழங்கிட மாவட்ட அளவிலான சிறப்பு வங்கியாளர்கள் கூட்டம், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்திர சேகர் சாகமூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 16.09.2020 அன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கடலூர் மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. காஞ்சனா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.அகிலன், அனைத்து வங்கியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்,

பிரதம மந்திரியின் தெருவோர வியாபாரிகளுக்கான சுய சார்பு நிதி PM-SVANidhi பெற்ற சாதனையாளர்களின் கதை

» கன்னியாகுமரி மாவட்டம்

பொருளாதார ஏற்றம் தந்த இயக்கம்

எனது பெயர் தங்கராஜ், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், பறக்கின்கால் பண்டு குடிசை பகுதியில் வசித்து வரும் நான், கண் மை, ஊசி, பாசிமணி, சேப்டி பின் போன்ற பொருட்களை ரயில் நிலையங்கள் மற்றும் தெருவோரங்களில் கடை வைத்து விற்பனை செய்து வருகிறேன்.

தற்போது Covid-19-ன் காரணமாக தொழிலில் ஏற்பட்ட நலிவு நிலையிலிருந்து மீளவும், எனது தொழிலினை மறு சீரமைப்பு செய்யவும் உதவும் விதமாக தெருவோர வியாபாரிகளுக்கான பிரதம மந்திரியின் PM-SVANidhi திட்டம் மூலம் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு மற்றும் நாகர்கோவில் மாநகராட்சி வாயிலாக ரூ.10,000/ கடனுதவி கிடைக்கப் பெற்றது. மேற்படி நிதியானது எனது தொழிலினை மறு சீரமைப்பு செய்ய பெரும் உதவியாக இருந்தது என்றால் அது மிகையாகாது.

வாழ்வாதாரம், பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த நான், தற்போது கௌரவமாக வாழ இந்த கடனுதவி பெரிதும் பயனுள்ளதாக இருந்தது. தற்போது இரயில் பாதை அருகில் நிலையான ஒரு இடத்தில் கடை அமைத்து வியாபாரம் செய்வதன் மூலம் எனக்கு தினமும் ரூ.700/லிருந்து ரூ.1000/- வரையில் வியாபாரம் நடைபெற்று நாள் ஒன்றுக்கு ரூ. 200/- முதல் ரூ. 350/- வரையில் லாபம் கிடைக்கப் பெறுகிறது. தற்போதைய சூழலில் மேற்படி உதவி எமது வாழ்வாதார நிலையை மேம்பாடு அடைய செய்தது என்பதனை நன்றியுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

மேலும், PM-SVANidhi திட்டத்தின் மூலமாக எங்களை போன்றோர் பயனடைய உதவிய மத்திய மாநில அரசுகளுக்கும், எங்களுக்கு கடன் வழங்க விரைந்து நடவடிக்கை மேற்கொண்ட கன்னியாகுமரி மாவட்ட தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் அலுவலர்களுக்கும் மற்றும் நாகர்கோவில் மாநகராட்சிக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தெருவோர வியாபாரிகளுக்கு வாழ்வு தந்த இயக்கம்

என் பெயர் முரளிகிருஷ்ணன் (க/பெ. சுப்ரமணியன்), அரியலூர் மாவட்டம், ராவுத்தன்பட்டி, வாலாஜாநகரம், சாஸ்திரி நகர் பகுதியில் வசித்து வரும் நான் அரியலூர் நகராட்சியில் கடந்த 20 ஆண்டுகளாக தெருவோரத்தில் கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். எனது தொழில் நன்றாக நடந்துக் கொண்டிருந்தது. கொரோனா நோய் தொற்று காரணமாக அறிவிக்கப்பட்ட நாடு தழுவிய ஊரடங்கால் எனது தொழில் மிகவும் பாதிக்கப்பட்டது. நானும் எனது குடும்பமும் போதிய வருமானம் இன்றி வறுமையில் வாடினோம். அந்த நேரத்தில் PM-SVANidhi திட்டத்தின் கீழ் தெருவோர வியாபாரிகளுக்கு ஒரு நபருக்கு ரூ. 10,000/- வீதம் வங்கிக் கடன் கொடுப்பதாக அறிந்து, எங்கள் பகுதியில் செயல்படும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின்படி ரூ. 10,000/- வங்கிக் கடன் பெற்றேன். அத்தொகை எனது தொழிலை தொடரவும் மேம்படுத்தவும் பெரும் உதவியாக இருந்தது. தெருவோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை காக்கும் வகையில் வங்கிக் கடன் வழங்கிய அரசுக்கும், வழிகாட்டிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொருளாதார வளர்ச்சி தந்த இயக்கம்

திண்டுக்கல் மாவட்டம், பழனி தாலுக்கா, காமராஜர் நகர் பகுதியை சார்ந்த 12 பெண்கள் இணைந்து 2015ஆம் ஆண்டு புரட்சி மலர்கள் மகளிர் சுய உதவிக் குழுவினைத் துவக்கினர். இக்குழுவின் உறுப்பினர்கள் வீட்டிலேயே பூக்களைத் தொடுத்து அதற்கான கூலியைப் பெற்று வந்தனர். சிறப்பான முறையில் இயங்கி வந்த இந்தக் குழுவின் உறுப்பினர்களில் 3 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு திண்டுக்கல் கனரா ஊரக சுய வேலை வாய்ப்பு பயிற்சி மையத்தில் பூங்கொத்து மற்றும் கல்யாண பந்தல் வேலைப்பாடுகள் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியைத் தொடர்ந்து சுயமாக தொழில் செய்ய விரும்பியவர்களுக்கு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் கடந்த 05.09.2017 அன்று திண்டுக்கல் மகளிர் திட்ட அலுவலகத்தின் மூலமாக விற்பனை பெட்டி (Kiosk) வழங்கப்பட்டது. புரட்சி மலர்கள் மகளிர் சுய உதவிக் குழுவில் உள்ள 4 உறுப்பினர்கள் இணைந்து பூங்கொத்து மற்றும் பூக்கள் விற்பனை செய்யும் தொழிலினை தொடங்கினார்கள். கூலிக்கு பூக்களைத் தொடுத்து மொத்த வியாபாரிகளிடம் கொடுத்து வந்த இக்குழுவின் உறுப்பினர்கள் தற்போது பூக்களைத் தொடுத்து விற்பனை செய்தல் மற்றும் கல்யாண அலங்கார வேலைப்பாடுகள் செய்து தருவதன் மூலம் கணிசமான தொகையினை மாதந்தோறும் பெற்று வருகின்றனர். கூலிக்கு வேலை செய்து வந்த தங்களுக்கு பயிற்சியும், கடையும் வழங்கி நிலையான வாழ்வாதாரத்திற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு புரட்சி மலர்கள் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

வாழ்வு தந்த இயக்கம்

ஈரோடு மாவட்டம்

எஸ். கஜேந்திரன் (த/பெ.செங்கோடன்) ஆகிய நான் கடந்த 19 ஆண்டுகளாக ஈரோடு நகராட்சியில் தெருவோர வியாபாரியாக பழைய பைகளைத் தைத்தல், சரி செய்தல் போன்ற பணிகளை செய்து தினசரி ரூ. 400/- முதல் ரூ. 500/- வரை வருமானமாக பெற்று வந்தேன். எனக்கு ஈரோடு மாநகராட்சியின் மூலம் வழங்கப்படும் தெருவோர வியாபாரிகளுக்கான அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. தற்போது கொரோனா தொற்று பரவல் காரணமாக அறிவிக்கப்பட்ட ஊரடங்கின் காரணமாக எனது தொழில் முற்றிலும் முடங்கி விட்டதால், சுமை தூக்கும் வேலைக்குச் சென்று எனது குடும்பத்தை நடத்தி வந்தேன். இந்த காலக்கட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் எனக்கு பாரதப் பிரதமரின் PM-SVANidhi திட்டத்தின் கீழ் பஞ்சாப் நேஷனல் வங்கி ஈரோடு கிளையின் மூலம் ரூ. 10,000/- கடன் வழங்கப்பட்டது. மேற்கண்ட தொகையின் மூலம் எனது தொழிலுக்குத் தேவையான மூலதனப் பொருட்களை வாங்கி, தற்போது எனது தொழிலை மீண்டும் தொடங்கி நடத்தி வருகிறேன். தற்போது எனக்கு தினசரி ரூ. 500/- முதல் ரூ. 600/- வரை வருவாய் கிடைக்கிறது. தமிழ்நாடு நகர்புற வாழ்வாதார இயக்க திட்டத்தின் மூலம் எனது வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவிய தமிழ்நாடு அரசுக்கு எனது உளப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த வளர்ச்சி காண்போம் தோழி!

ஒருங்கிணைந்த வளர்ச்சி காண்போம் தோழி!
மனம் நிறைந்த இன்பம் அடைவோம் தோழி!
சுய உதவிக் குழுக்கள் இயக்கம் மூலம்
வலிவும் பொலிவும் பெறுவோம் தோழி!

உடல் நலம், மன வளம் காக்கும் முறைகள்
அறிவோம்; தெளிவோம்; உயர்வோம் தோழி!
திடமிகு ஏற்றம்; சீர்மிகு வாழ்வு
என்றும் நிலைக்க உழைப்போம் தோழி!

மனமென்னும் வானில் ஆசை மேகங்கள்
ஆயிரமாயிரம் அலைந்து திரியலாம் –
எதுவும் உன்னை தாக்காத வண்ணம்
உறுதியைக் கொண்டால் மகிழ்ந்து வாழலாம்.

சேமிப்பு என்பது வாழ்வின் தேவை
குழுவில் அதனைத் தொடர்ந்திருப்போம்
சிக்கன வாழ்வே சிறந்த வாழ்வு
என்றும் அதனை நினைவில் கொள்வோம்

கல்வி, கைத்தொழில் கற்றுக் கொள்ள
தயக்கம், கலக்கம் தவிர்ப்போம் தோழி!
உயர்வுக்கும், பெருமைக்கும் அதுதான் பாதை
துணிவுடன் செயல்பட இணைவோம் தோழி!

இல்லற வாழ்வில் சிறுகுடும்ப நெறியைக்
கடைப்பிடித்தால் பெரும் நன்மை தோழி!
எல்லையில்லாத உன் முயற்சிகளாலே
குடும்பம் வளர்ச்சியைக் காணட்டும் தோழி!

அதிக வட்டிக்குக் கடன் வாங்கி
அல்லல் படுவதை தவிர்ப்பாய் தோழி!
வங்கிக் கடனை மட்டும் பெற்று
அதையும் முறையாய் அடைப்பாய் தோழி!

தொழிலுக்கும் வளர்ச்சிக்கும் கடன் பெறுதல்
நன்மை செய்தால், அதை ஆதரிப்போம் – வீண்
செலவுக்கும் பகட்டுக்கும் கடன் பெற்றால்
தொல்லைகள் தான் அதை நிராகரிப்போம்.

ஒப்பீட்டு வாழ்க்கை அமைதி தராது,
உன் மனம் தான் கெடுமே தோழி!
தப்பிதமான பாதையில் வாழ்வு சென்றிட
அதுவும் காரணம் ஆகுமே தோழி!

விட்டுத்தருதல் வெற்றியைக் கொடுக்கும்
போட்டி பொறாமை மனதைக் கெடுக்கும்
ஒற்றுமையாக நீங்கள் உழைத்தால்
குழுக்களின் செயல் கண்டு உலகம் மதிக்கும்.

உள்ளத்தில் உள்ளது உலகம் என்பார்
உள்ளத்தை அமைதியாய் வைத்திருப்போம்
ஒருங்கிணைந்த வளர்ச்சியை நோக்கி
பயணத்தை இன்றே துவக்கி வைப்போம்.

ஜா.சம்பத்
கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சேலம் மாநகராட்சி, அம்மாபேட்டை மண்டலத்திற்கு உட்பட்ட 43வது வார்டு, கிச்சிப்பாளையம், கரீம் காம்பவுண்ட்டில் வசித்து வரும் என் பெயர் கண்ணன். நான் சேலம் மாநகராட்சி, நேரு கலையரங்கம்

அருகில் கடந்த ஆறு வருடமாக நடைபாதையில் கம்மங்கூழ் விற்று வந்தேன். கொரோனா தொற்று பரவல் காரணமாக பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு காலத்தில் போதுமான வருமானம் இல்லாததால் நானும் என் குடும்பமும் மிகவும் கஷ்டத்திற்குள்ளானோம்.

அப்பொழுது தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் சேலம் மாநகராட்சியில் PM.SVANidhi திட்டத்தில் தெருவோர வியாபாரிகளுக்கு ரூ.10,000/ வழங்குவதை அறிந்தேன். அத்திட்டம் குறித்த விபரங்களை அறிந்த நான், எனது தொழில் ரீதியான ஆவணம், தெருவோர வியாபாரிக்கான அடையாள அட்டை மற்றும் ஆதார்அட்டை ஆகியவற்றை கொண்டு PM.SVANidhi திட்டத்திற்கான இணையத்தில் பதிவேற்றினேன்.

தொடர்ந்து சம்மந்தப்பட்ட சிண்டிகேட் வங்கி அதிகாரிகள் நான் தொழில் செய்யும் இடத்திற்கு நேரில் வந்து விசாரித்து மேலும் எனது தொழில் ரீதியான ஆவணங்களை சரிப்பார்த்து PM-SVANidhi திட்டத்திற்கு தகுதியான பயனாளி என்று உடனடியாக எனக்கு சிண்டிகேட் வங்கியில் ரூ.10,000/ கடன் உதவி வழங்கினர்.

அப்பணத்தை பெற்று எனது வியாபாரத்தை மேம்படுத்தும் நோக்கத்தில் தற்போது புதிதாக ஒரு தள்ளுவண்டி வாங்கிக் கொண்டு அதில் கம்மங்கூழ் விற்பனை செய்து வருகின்றேன். என் வாழ்வாதார சூழலை மேம்படச் செய்வேன் என்ற நம்பிக்கையும் எனக்கு மேலோங்கியுள்ளது.

தெருவோர வியாபாரிகளான எங்களின் நிலையை புரிந்துக் கொண்ட தமிழக அரசு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் PM-SVANidhi என்ற திட்டத்தினை செயல்படுத்தி, அதன் மூலம் எங்களுக்கு கடன் உதவி வழங்கி, கொரோனா பெருந்தொற்று காலத்தில் எங்களின் வாழ்வாதாரம் நிலைக்கவும், மேம்படவும் வழிவகை செய்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு தெருவோர வியாபாரிகளின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவ குறிப்பு

ஆவாரைப் பூவின் சிறப்பு

இன்று பலரும் சர்க்கரை நோயால் அவதிப்படுகின்றனர். இந்த சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும் குணம் ஆவாரைக்கு உண்டு. மேலும் மேனிக்கு தங்க நிறத்தைக் கொடுக்கும் தங்கநிறப் பூவும் இதுதான். "ஆவாரை பூத்திருக்க சாவாரைக் கண்டதுண்டோ.." என்ற மருத்துவப் பழமொழி உண்டு. ஆவாரம் பூ எண்ணற்ற மருத்துவ குணங்களைக் கொண்டது. இது நோய்களைக் குணப்படுத்துவதால் நோயினால் மனிதன் இறப்பதை தடுக்கிறது.

நீரில் ஆவாரம் பூக்கள் அல்லது காய வைத்த ஆவாரம் பூ பொடி சேர்த்து கொதிக்க வைத்து வடிகட்டி, குடிநீராக அருந்தி வரலாம். இது உடல் சூடு, பித்த அதிகரிப்பு, நீர்க்கடுப்பு, அதிக உதிரப்போக்கு, ஒழுங்கற்ற மாதவிடாய், குடற்புண் வயிற்றுப்புண் போன்றவை நீங்கும்.

நீரிழிவு நோயாளிக்கு இது மிகவும் சிறந்த மூலிகைக் குடிநீர் ஆகும். இதனைத் தொடர்ந்து அருந்தி வந்தால், உடலை நோயின்றி ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம். இரத்தத்தைச் சுத்தப்படுத்தும், உடலில் உள்ள தேவையற்ற கழிவுகளை வியர்வை மூலம் வெளியேற்றி, சருமத்திற்கு மினுமினுப்பைக் கொடுக்கும். மேலும் பெண்களுக்கு உண்டாகும் வெள்ளைப் படுதலை அறவே நீக்கும்.



ஆத்விகா மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றிக் கதை

கள்ளக் குறிச்சி மாவட்டம், சின்ன சேலம் நகராட்சி, 9 வது வார்டு, பிள்ளைவீட்டுத் தெருவில் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் கடந்த 2018ஆம் ஆண்டு முதல் ஆத்விகா மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் சார்பில் சின்ன சேலம் நகராட்சி கனரா வங்கியில் சேமிப்புக் கணக்கு துவங்கி, இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ள 5 பெண்களும் சேமித்து வந்தனர்.

இக்குழுவின் உறுப்பினர்களாக உள்ள ஐந்து பெண்களும் ஒன்றிணைந்து சானிடரி நாப்கின் தயாரிக்கும் தொழிலை மேற்கொள்ள முடிவெடுத்து அதற்கான மூலதனத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் SEP-G திட்டத்தின் மூலம் ரூ. 2,50,000/வங்கியில் பெருங்கடன் பெற்று, இந்தத் தொகையைக் கொண்டு, சென்னை, சிவகாசி ஆகிய ஊர்களில் இருந்து மூலப்பொருட்களை வாங்கி, சானிடரி நாப்கின்களை உற்பத்தி செய்யத் துவங்கினர். தாங்கள் தயாரித்த நாப்கின்களை மகளிர் திட்டம் மூலம் சேலம் மற்றும் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனைகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

துவக்கத்தில் ஐந்து நபர்களை வேலைக்கு வைத்திருந்த இவர்கள் தற்போது ஒன்பது நபர்களை வேலைக்கு வைத்துள்ளனர். அவர்களுக்கு மாதந்தோறும் கணிசமான ஊதியம் தருகின்றனர்.

தங்களின் சானிடரி நாப்கின் தயாரிப்புத் தொழில் சிறப்பாக நடைபெற்று வருதாகக் கூறும் ஆத்விகா மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள், தங்களுக்கு கடன் வழங்கி, தொழில் தொடங்க வழிகாட்டிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்குத் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

"அண்ணல் வழியில் அந்நியம் தவிர்ப்போம்"

இந்தியனாய் இரு; இந்தியப் பொருளையே வாங்கு
(Be India Buy Indian)
என்றொரு முழக்கத்தினை
சுதேசி இயக்கமாக மாற்றி,
கிராமங்களுக்கான தொழில் முயற்சியும்
தற்சார் பொருளாதாரத்தையும் அன்றே சொன்ன
அஹிம்சையெனும் அற்புத ஆயுதம் தந்த
அண்ணல் காந்தி அவதரித்த
அக்டோபர் திங்களில் அவர் கனவை நனவாக்கும்
உற்ற தொழில் ஒன்றை செய்து
ஊரார் உயர்வு பெற உழைத்திடுவோம்!

என்ன தொழில் செய்திடலாம்
என்றெல்லாம் ஐயமிருப்பின் – ஆலோசனை சில
வீட்டில் வீணாகும் காய்கனி கழிவுகளை
இயற்கை உரமாய் உருவாக்கிடலாம்;
சுற்றம் முழுதும் சிதறிக் கிடக்கும்
பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்து
மகளிர் நடத்தும் மறுசுழற்சி மையத்திற்கு
அனுப்பிடலாம்; அழகுக் கலை பயிற்சி பெற்று
அழகு நிலையம் வைத்திடலாம் – இதுமட்டுமா ?
தையற்கலை பயிற்சி பெற்று
ஆடையகம் வைத்திடலாம்;
இட்லிப் பொடி, மிளகாய்ப் பொடி, அப்பளம்,
ஊறுகாயென உணவுப் பொருட்களையும்
உருவாக்கிடலாம்; மண்பாண்டங்கள், கொலு
பொம்மைகள் மட்டுமின்றி மண்புழு உரங்களையும்
உருவாக்கிடலாம், காய், கனி, மலர்கள், கீரைகள்,
மூலிகைகள், தானியங்களென இயற்கை
விவசாயமும் இருக்கிறதே!

கைத்தறி, விசைத்தறியில் ஆடைகள் பல நெய்தல்,
சணல் பொருட்கள், தோல் பொருட்கள், சானிட்டரி
நாப்கின், பாக்குமட்டைகள் மட்டுமல்ல பாய்
பொருட்களும் செய்திடலாம்; அகர் பத்தி,
சாம்பிராணி, மெழுகுவர்த்தியோடு அலங்கார
நகைகள் செய்தல் என எண்ணற்ற தொழில்
வாய்ப்புகளை உள்ளூரிலேயே உருவாக்கிடலாம்!

என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்
என்ற நிலை உணர்ந்து நாம் உழைத்தாலே
அந்நிய பொருட்களின் அவசியத்தைக்
குறைத்திடலாம்; ராக்கெட் விஞ்ஞானமும்
சாத்தியமென்பதை சாதனை மகளிராய்
உணர்ந்திடுவோம்!

இனியொரு விதி செய்வோம் – அதை
குழுக்கள் தோறும் கற்பிப்போம்! – ஆம்

"எங்கள் தேவைக்கும், தேசத்தின் வளர்ச்சிக்கும்
மகளிர் தொழில் முனைவோராய் மாறிடுவோமென
சங்கே முழங்கு...!"

செந்தில் பலராமன் (செயலர்)
தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்

முற்றக் கச்சேரி

அன்புள்ள முற்றம் வாசகர்களே

சுய உதவிக் குழுவின் ஊக்குனர் மற்றும் உறுப்பினர்களிடையே நடைபெறும் உரையாடல்கள் மற்றும் கேள்வி பதில்கள் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்த விபரங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் முற்றக் கச்சேரி வெளியிடப்படுகிறது. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறோம். இனி முற்றக் கச்சேரிக்குள் போவோமா...

இடம் : சுய உதவிக் குழு அலுவலகம்

கதை மாந்தர்கள் :

ஊக்குநர் மதி, உறுப்பினர்கள் வடிவு, கமலா, கோமதி ஆகியோர்

சுய உதவிக் குழு அலுவலகத்தில் ஊக்குநர் மதி அமர்ந்திருக்கிறார். அப்போது குழுவின் உறுப்பினர்களான வடிவு, கமலா, கோமதி ஆகிய மூவரும் அலுவலகத்தின் வெளியே இருக்கும் தண்ணீர் குழாயில் கைகளை நன்கு சோப்பு போட்டு கழுவி விட்டு அலுவலகத்திற்குள் வருகின்றனர். அனைவரும் முகக் கவசம் அணிந்துள்ளனர்.

கமலா, வடிவு, கோமதி : மதி அக்கா... மதி அக்கா...

மதி : வாங்க... வாங்க... வந்து உட்காருங்க... மூவரும் இடைவெளி விட்டு அமர்கின்றனர்.

கமலா : என்னக்கா எதுக்கு எங்களை இப்படி அவசரமா வரச் சொன்னீங்க?

மதி : நம்ம கூட்டமைப்பு சார்பா வைச்சிருக்கிற 'வேளாண் கருவிகள் வாடகைக்கு விடும் மையம்' பத்தி உங்களுக்கு சொல்லப் போறேன்.

கோமதி : வேளாண் கருவிகள் வாடகைக்கு விடும் மையமா... அப்படின்னா என்ன அக்கா?

மதி : அப்படின்னா... விவசாய வேலைகளுக்குத் தேவையான இயந்திரங்களை வாடகைக்கு விடும் மையம்னு அர்த்தம்.

வடிவு : இந்த மையத்தாலே யாருக்கு என்ன பயன் அக்கா?

மதி : என்ன இப்படி கேட்டுட்ட வடிவு? நம்ம நாடே விவசாய நாடு, விவசாயந்தான் நமக்கு

முக்கியம். இன்னைக்கு பெண்கள் கூட விவசாயத்துல ஈடுபட்டு வராங்க. ஏன் சுய உதவிக் குழுக்களில் இருக்கும் பெண்கள் கூட விவசாயம் செஞ்சிட்டு இருக்காங்க. அவர்களுக்கு எல்லாம் இந்த வேளாண் இயந்திரங்கள் வாடகை மையம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

வடிவு : விவசாய வேலைகளுக்கு இயந்திரங்களா? நீங்க சொல்வது புரியலை அக்கா?

மதி : விவசாய வேலைகளுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தினா நல்ல விளைச்சல் பெற முடியும். ஆட்களுக்குக் கொடுக்கிற கூலியும் குறையும். ஆனா எல்லா விவசாயிகளும் இயந்திரங்களை வாங்க முடியாது. ஆனா வாடகைக்கு வாங்க முடியும்தானே... அவங்களுக்கு இந்த வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு விடும் மையங்கள் மிகவும் பயனுள்ளதா இருக்கறதா நம்ம ஊர்ல பேசிக்கறாங்க. இதைக் கேட்கும் போது ரொம்ப சந்தோஷமா இருக்கு...

கமலா : இந்த வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு விடும் மையங்களை தொடங்க தேவையான முதலீட்டை யார் தருவாங்க அக்கா?

மதி : தேர்வு செய்யப்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக மானிய உதவியுடன் வங்கிக் கடன் மூலமாக ரூ. 10 இலட்சம் மதிப்பிலான வேளாண் இயந்திரங்கள் வாங்கித் தரப்படும். அவற்றை வாடகைக்கு விட்டு கிடைக்கும் வருவாயில் வங்கிக் கடனைக் கட்டலாம். மீதமுள்ளத் தொகையை கூட்டமைப்புகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

கோமதி : என்ன வகையான இயந்திரங்கள் வாடகைக்குத் தருவாங்க அக்கா?

மதி : பவர் டில்லர், களை எடுக்கும் இயந்திரம், நாற்று நடும் இயந்திரம், ஸ்பிரேயர்

உள்ளிட்ட நவீன விவசாய கருவிகள் இந்த மையத்தின் மூலமா வாடகைக்கு தருவாங்க.

கமலா : சுய உதவிக் குழுக்கள் மட்டும் தான் இந்த மையத்தைப் பயன்படுத்த முடியுமா? யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாமா?

மதி : விவசாயம் செய்யும் யார் வேண்டுமானாலும் இந்த மையத்தைப் பயன்படுத்தலாம்.

வடிவு : இந்த இயந்திரங்களுக்கான வாடகையை யார் நிர்ணயம் செய்வாங்க?

மதி : நாமதான் ஒன்று கூடி முடிவெடுக்கணும். வேளாண்மை பொறியியல் துறை மற்றும் தனியார் வாடகை அளவைப் பார்த்து பரிசீலித்து முடிவெடுக்க வேண்டும்

கமலா : இந்த வேளாண் இயந்திரங்களை சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் பயன்படுத்தினாலும் வாடகை உண்டா அக்கா?

மதி : ஆமாம் உண்டு. ஏன்னா இது இலவசம் கிடையாது, நமக்கு வேணும் பொழுது வேளாண் இயந்திரங்கள் கிடைக்குமே தவிர இலவசம் என்ற பேச்சுக்கே இடமில்லை

வடிவு : நாம் ஏன் அக்கா வாடகை கட்டணும்... இது நம்ம குழுவுக்கு அல்லது கூட்டமைப்புக்கு சொந்தமான இயந்திரம் தானே?

மதி : ஒரு கண்ணோட்டத்தில் இது நம்ம இயந்திரம் என்பது சரிதான். ஆனால், இந்த இயந்திரங்களை நமது அரசாங்கம் நாம வாடகைக்கு விட்டு வருமானம் பெற தான் கொடுத்திருக்கு...

கமலா : அப்படீன்னா அந்த வாடகை பணத்தை நாம பயன்படுத்திக் கொள்ளலாமா?

மதி : இல்லை. நமக்கு ரொக்கக் கடனுக்கு பதிலாதான் இந்த இயந்திரங்களை பொருளா கொடுத்திருக்காங்க. அதனால நமக்கு அரசாங்கம் கொடுத்த இயந்திரங்களுக்கு உரிய பணத்தை திரும்ப செலுத்தி, கடனை முழுமையாக கட்டியவுடன் தொடர்ந்து கிடைக்கும் வருவாயினை நமது உறுப்பினர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்

கோமதி : நம்ம வாங்கியிருக்கிற இயந்திரங்களை விட கூடுதலாக இயந்திரங்கள் தேவைப்பட்டால் அரசு உதவி செய்யுமா அக்கா

மதி : நாம ஏன் அரசை எதிர்பார்க்கணும். நம்ம குழு கணக்கில் உள்ள நிதியை பயன்படுத்திக்கலாம் அல்லது வங்கி கடன் வாங்கிக் கொள்ளலாம்

வடிவு : அக்கா இந்த இயந்திரங்கள் எல்லாம் பொட்டல் வெளில இருக்கே. மழை வெயில் பட்டு வீணா போயிடாதா?

மதி : அதுக்கு தான் நம்ம மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் கூரை அமைச்சு கொடுக்க நமது மாவட்ட திட்ட அலுவலரைக் கேட்டிருக்கோம்

கமலா : சரி அக்கா இந்த இயந்திரங்களை யார் பயன்படுத்தறாங்க? எத்தனை மணி நேரம் பயன் படுத்தினாங்க போன்ற விவரங்களை யார் எப்படி பராமரிக்கிறாங்க?

மதி : அதுக்குதான் லாக் புக்க வைக்கச் சொல்லி இருக்காங்க.

கோமதி : அக்கா இந்த இயந்திரங்கள் வாங்க அரசு எவ்வளவு பண உதவி செய்யறாங்க?

மதி : வேளாண் பொறியியல் துறை மூலமாக ரூ. 8 லட்சம் வரையிலும், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் மூலமாக ரூ. 1.75 இலட்சம் வரையிலும் நிதி உதவி தந்திருக்காங்க. சுய உதவிக் குழு அல்லது கூட்டமைப்பின் சார்பாக ரூபாய் 50,000/- தரணும்.

கமலா : இந்த இயந்திரங்களை வாடகைக்கு விட்டா வாடகை மூலமா வருமானம் கிடைக்கும் தானே?

மதி : வருமானம் ஒருபக்கம் போக சரியான நேரத்தில் உழவு பணிகளை செய்ய இந்த இயந்திரங்கள் சரியான நேரத்தில் குறைவான செலவில் கிடைக்குமே. அது மட்டுமில்லாமல் இந்த இயந்திரங்களை பழுது பார்க்க மற்றும் புதுப்பிக்க இந்த வாடகை தொகையிலிருந்து சேமிக்கப்படும் பணத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

வடிவு : இந்த வாடகை பணத்தை இயந்திர வாடகை மைய வங்கி கணக்கில் கட்டணுமா?

மதி : ஆமாம் கட்டாயம் வங்கி கணக்குல செலுத்தணும்.

கமலா : சரி அக்கா நாங்க புறப்படறோம். வாடகை வேளாண் இயந்திர மையம் தொடர்பாக எங்களுக்கு நிறைய விஷயங்கள சொல்லி புரிய வைச்சிருக்கீங்க. அதுக்கு ரொம்ப சந்தோஷம் அக்கா. நாங்க வரட்டுமா அக்கா?

மதி : சரி போயிட்டு வாங்க...

கமலா, கோமதி, வடிவு ஆகிய மூவரும் மதியிடம் விடைபெற்று, தங்களின் வீடுகளுக்குச் செல்கின்றனர்.

(முற்றக் கச்சேரி தொடரும்)

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் சார்பில்
திட்ட செயலாக்க முகமை நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா திறன் வளர்ப்புப் பயிற்சி திட்டத்தின் சார்பாக, திட்ட செயலாக்க முகமை நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளும் நிகழ்ச்சி 07.10.2020 அன்று சென்னை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

11 வது திட்ட ஒப்புதல் குழுவின் ஒப்புதலின்படி புதியதாக 53 செயலாக்க முகமைகள் தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தில் பயிற்சியளிக்க தேர்வு செய்யப்பட்டுள்ளன. இந்நிறுவனங்களில் முதற்கட்டமாக மாபோ பவுண்டேஷன், ஐஸ்வர்யா விஞ்ஞான், டாக்டர் எம்.ஜி.ஆர். எஜிகேஷன்ஸ் அண்ட் ரிசர்ச் இன்ஸ்டியூட், லூர்து அம்மாள் டிரஸ்ட், டிப்ஸ் குளோபல் இன்ஸ்டியூட், குட்லக் இண்டர்நேஷனல் டிரெய்னிங் இன்ஸ்டியூட், கேப்பிடல் எஜிகேஷனல் டிரஸ்ட் ஆகிய 7 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட நிறுவனங்களின் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தின் முதன்மை இயக்கு அலுவலர் திரு. ஜெ. கணேஷ் கண்ணா, இணை இயக்குநர்/மாநில திட்ட மேலாளர் திருமதி. என். கவிதப்பிரியா, மாநில திட்ட மேலாளர் திரு. ஜி. குமரன், TSA திட்ட நிறுவன மேலாளர் திரு. பத்மநாபன் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திட்ட வழிகாட்டி கையேட்டின்படி, பயிற்சி மையங்கள் அமைத்து, தகுதி வாய்ந்த கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து, வேலைவாய்ப்பு ஏற்படுத்திட தேர்வு செய்யப்பட்ட பயிற்சி நிறுவனங்களின் பொறுப்பாளர்களுக்கு முதன்மை செயல் அலுவலர் அவர்கள் உரிய அறிவுரைகளை வழங்கினார்கள்.

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ் ஆன்லைன் (Online) வேலைவாய்ப்பு முகாம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலான / வட்டார அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் நடைபெற்று வருவதை அறிவீர்கள். தற்சமயம் கோவிட் 19 தொற்று காரணமாக அத்தகைய நேரடி வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்த இயலவில்லை. அதற்கு மாற்றாக ஆன்லைன் (Online) மூலமாக வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக மத்திய ஊரக அமைச்சகத்தின் ஆலோசனையின்படி, தளவாடங்கள் பிரிவு திறன் குழுமத்துடன் (Logistics Sector Skill council) இணைந்து தேசிய அளவிலான ஆன்லைன் வேலைவாய்ப்பு முகாம் 06.09.2020 அன்று நடைபெற்றது.

TVS, Delivery, Flipcart, Ecom Express, IRST, NBHC, Reliance, Logskim ஆகிய பெரும் நிறுவனங்கள் பங்கேற்ற இம்முகாமில் 271 இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வேலைவாய்ப்பு முகாமில் தமிழகத்தில் தளவாடங்கள் துறையில் தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களான, யூ.டி.எஸ்., டி.வி.எஸ்., குயிஸ்கார்ப் லிமிடெட், ஆனுனா, கோயமுத்தூர் வெல்பேர் அசோசியேஷன், ஸ்ரீசக்ரா ஆகிய நிறுவனங்களில் பயிற்சி முடித்த இளைஞர்கள் மேற்கண்ட ஆன்லைன் நேர்காணலில் பங்கேற்றனர்.

தேர்வு செய்யப்பட்ட இளைஞர்களில் இதுவரை 56 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், பணியில் சேர்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோவிட் தொற்று காரணமாக நேரடியாக பங்கேற்பதற்கு பதிலாக ஆன்லைன் மூலம் பங்கேற்றது புதிய அனுபவமாகவும், எளிதாகவும் இருந்ததாக வேலைவாய்ப்பு நிறுவனங்களும், பங்கேற்பாளர்களும் தெரிவித்தனர்.

மருத்துவ குறிப்பு

சுவையும் சத்தும் நிறைந்த பூண்டு சாதம்

உயிர்கள் அனைத்திற்கும் உணவு தேவை. அந்த உணவு உடல் நலத்தை பேணுவதாக இருப்பதுடன் சுவையாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் சிறியவர் பெரியவர் என அனைவரும் விரும்பி உண்பார்கள். அந்த வகையில் இம்முறை சுவையும் சத்தும் நிறைந்த பூண்டு சாதம் செய்வது எப்படி என்பதைப் பார்ப்போம்.

தேவையானப் பொருட்கள் :

சாதம் – 2 கப், பூண்டு – 15 பல், காய்ந்த மிளகாய் – 2, தனியா – 1 ஸ்பூன், கடலைப் பருப்பு – 1 ஸ்பூன், உளுத்தம் பருப்பு – 1 ஸ்பூன், எண்ணெய் மற்றும் உப்பு – தேவையான அளவு, கடுகு – கால் ஸ்பூன், கறிவேப்பிலை – சிறிதளவு

செய்முறை :

அடுப்பில் ஒரு கடாயை வைத்து, எண்ணெய் 1 ஸ்பூன் விட்டு அதில் கடலை பருப்பு, உளுத்தம் பருப்பு, தனியா, மிளகாய் ஆகியவற்றைப் போட்டு சிவக்க வறுக்கவும். கடைசியில் 4 அல்லது 5 பூண்டு பற்களைப் போட்டு சற்று வதக்கி எடுத்து ஆற விடவும். பின்னர் வறுத்த அனைத்தையும் நன்றாகப் பொடித்துக் கொள்ளவும்.

அதே கடாயில் தேவையான அளவு எண்ணெய் ஊற்றி அதில் மீதமுள்ள பூண்டு பற்களைப் போட்டு சிவக்க வதக்கி எடுத்து, தனியாக வைத்துக் கொள்ளவும். அதே எண்ணெயில் கடுகு போட்டு வெடிக்க ஆரம்பித்ததும் கறிவேப்பிலை சேர்க்கவும். சாதம் மற்றும் பொடித்து வைத்துள்ள பொடி, உப்பு ஆகியவற்றைச் சேர்த்துக் கலந்து விடவும். கடைசியில் வதக்கி வைத்துள்ள பூண்டையும் சேர்த்துக் கிளறி இறக்கி வைக்கவும். ரொம்ப சுவையான பூண்டு சாதம் ரெடி.

கண்களைக் காப்போம்...

ஒருவரது கண்களைப் பார்த்தே சொல்லிவிடலாம் அவரது எண்ணத்தைப் பற்றி. அதுபோல நாம் சந்திக்கும் நபர் தற்போது உற்சாகமாக இருக்கிறாரா, சோர்வாக இருக்கிறாரா என்பதை கண்ணாடி போல காட்டிக்கொடுப்பதும் கண்கள்தான்.

எனவே கண்களைப் பேணிக் காப்பது அவசியம். கண்ணிற்கு குளிர்ச்சிதான் மிக முக்கியம். எனவே வெயிலில் அலைந்து திரிந்து வீடு திரும்பியதும் கண்களை குளிர்ச்சியாக்கும் வேலையை முதலில் செய்யுங்கள்.

கண்களுக்காக செய்ய வேண்டியவை

கண்கள் மீது வெள்ளரித் துண்டங்களை வைத்து ஓய்வெடுத்தால் கண்களுக்கு நல்ல குளிர்ச்சியைத் தரும். கண்களுக்கு ஏற்ற உணவாக கேரட், கீரை வகைகளை அதிகளவில் உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

தூக்கம் தான் கண்களுக்கு நாம் கொடுக்கும் அதிமருந்து. தூக்கம் குறைந்தால் கண்களைச் சுற்றி கருவளையங்கள் வரும். தொடர்ந்து தொலைக்காட்சிப் பார்ப்பது, கணினியைப் பார்ப்பதைத் தவிருங்கள். ஒரு சில விநாடிகளுக்கு உங்களது பார்வையை வேறு பக்கம் செலுத்தி கண்களுக்கு ஒரு மாற்றத்தைக் கொடுங்கள்.

கண்களில் தூசுப் பட்டால் உடனே கண்ணைக் கசக்காமல் சுத்தமான நீரினால் கண்களை திறந்தபடி கழுவுங்கள். கண்களில் அதிகப்படியான தூசுப்பட்டால் சுத்தமான தண்ணீரில் கண்களை திறந்தபடி முக்கிக் கொண்டு பல முறை கண்களைத் திறந்து மூடுங்கள். தூசு தண்ணீரில் கரைந்து போகும்.

கண்ணுக்குக் கண்ணாடி

கண் பார்வை குறையும்போது ஏனோ தானோவென்று ஒரு கடையில் கண்ணாடி வாங்கிப் போட்டுக் கொள்ளாதீர்கள். கண் மருத்துவரிடம் சென்று கலந்தாலோசித்து கண்ணாடியை வாங்குங்கள். பயன்படுத்தும் கண்ணாடியில் கீரல்கள் விழாமல் பார்க்க வேண்டியதும் அவசியம்.

கண்ணாடி போடுவதற்கு பதிலாக லென்ஸ் பயன்படுத்துபவர்கள் அதனை மிகுந்த எச்சரிக்கையுடன் கையாள வேண்டும். ஏதேனும் தொற்று ஏற்பட்டு பாதிக்கப்பட்டால் உடனடியாக சிகிச்சை பெற வேண்டும்.

சர்க்கரை வியாதி

கண்களை தாக்கும் நோய்கள் பல இருக்கின்றன. முக்கியமாக சர்க்கரை வியாதி கண்களை அதிகம் பாதிக்கிறது. எனவே சர்க்கரை வியாதி இருப்பவர்கள் கண்கள் மீது அதிக அக்கறை காட்ட வேண்டும். உடலில் இருக்கும் சர்க்கரை அளவை கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும். சர்க்கரையின் அளவை உணவுக் கட்டுப்பாட்டின் மூலமாகவே சீராக வைக்கலாம்.

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

மதிப்பு தொடர் ஆய்வு

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் முக்கிய நோக்கம் ஊரகத் தொழில்களை மேம்படுத்துதல் (குழு மற்றும் தனிநபர்), ஏற்கனவே உள்ள ஊரகத் தொழில்களை வலுப்படுத்துதல், சந்தை வாய்ப்புகள் மற்றும் மதிப்பு தொடர் வளர்ச்சி வாய்ப்புகளைக் கண்டறிதல், தொழில் வளர்ச்சிக்கான அடிப்படை சேவைகளை வழங்குதல் மற்றும் தொழில்களின் நிலைத்த தன்மையை உருவாக்குதல் போன்றவை ஆகும்.

இதன் ஒருபகுதியாக மாவட்ட பகுப்பாய்வு மூலம் கண்டறியப்பட்டு, முன்னுரிமைபடுத்தப்பட்ட உற்பத்திப் பொருட்கள், பல்வேறு துறைகளின் துணை பிரிவுகள் ஆகியவற்றை ஆராய்ந்து அலசி, அதில் உள்ள வாய்ப்புகள், சவால்கள் மற்றும் ஆபத்துகள் ஆகியவற்றை ஆழமாகப் புரிந்து கொண்டு பெண்கள், மலைவாழ் மக்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோருக்கு முக்கியத்துவம் தந்து, தொழில் மேம்பாட்டிற்கான உத்திகளை உருவாக்க இந்த மதிப்புத் தொடர் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இந்த மதிப்புத் தொடர் ஆய்வு மாவட்டங்களில் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது குறித்து மாநில அலுவலகம் மற்றும் உலக வங்கி ஆகியவை இணைந்து தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்ட மாவட்ட அலுவலகங்களுக்கு 01.09.2020 அன்று வெப்பினர் மூலம் பயிற்சி வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து மாவட்ட அணியினர் தங்கள் மாவட்டத்தில் பகுப்பாய்வின் மூலம் கண்டறிந்த பொருட்களுக்கு மதிப்புத் தொடர் ஆய்வு மேற்கொண்ட மாநில அலுவலகம் மற்றும் உலக வங்கிப் பிரதிநிதிகளுக்கு வெப்பினர் மூலம் தங்கள் ஆய்வுகளை 07.09.2020 மற்றும் 24.09.2020 அன்று முன்னிலைப்படுத்தினார்கள்.

இந்த ஆய்வு, சந்தை வாய்ப்புகளையும் அதில் ஏற்படும் தடைகளையும் அறிந்து கொள்ளவும், தொழில் மேம்பாட்டிற்காகத் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் உதவிகள் மற்றும் முதலீடுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தவும் உதவிகரமாக இருக்கும்.

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் ஆன்லைன் (Online) பயிற்சிகள்

கற்றல் என்பது ஒருபோதும் முடிவடையாத செயல். இந்த கோவிட் 19 நிலைமையில் கற்றல் செயல்முறையை அதன் வடிவத்தை மின்னணு கற்றலாக மாற்றியுள்ளது, இது இ-கற்றல் என்று அழைக்கப்படுகிறது. இ-கற்றல் என்பது இணையதளத்தின் மூலம் மின்னணு ஊடகங்கள் வழியாக நடத்தப்படும் கற்றலாகும்.

கோவிட் 19'ன் தற்போதைய சூழ்நிலையில் பாதுகாப்பு கருதி அதிகம் பயணிக்காமல் இருந்த இடத்தில் இருந்தே பணிகளை மேற்கொள்ளவும், ஆய்வுக் கூட்டங்களை மேற்கொள்ளவும், அறிக்கைகளை சமர்ப்பிக்கவும் புதிய தகவல்களைப் பகிரவும் இணையத்தின் மூலமாக மேற்கொள்ள பல்வேறு செயலிகள் செயல்பாட்டில் இருக்கின்றன.

இந்த செயலிகளை கையாள்வது குறித்தும் பயன்படுத்தும் முறைகள் மற்றும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் குறித்தும் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்ட மாவட்ட அலுவலர்களுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் வெப்பினார் மூலம் 25.09.2020 அன்று ஒருநாள் பயிற்சி மாநில அலுவலர்கள் மற்றும் உலக வங்கி குழுவினர்களால் வழங்கப்பட்டது.

கைவினைப் பொருட்களுக்கு கைகொடுக்கும் புத்தாக்கத் திட்டம்

எனது பெயர் அபிராமி (க/பெ. சண்முகசுந்தரம்), நான் சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டாரம், அமானி கொண்டலாம்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நானும், எனது கணவரும் மூங்கில் வாங்கி அதன் மூலம் கூடைகள், பொம்மைகள் போன்ற கைவினைப் பொருட்களை தயாரித்து விற்பனை செய்யும் தொழிலினை செய்து வருகிறோம். கொரோனா ஊரடங்கு காலத்தில் நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டோம். எங்களது தொழில் மிகுந்த பாதிப்பிற்கு உள்ளானதால், பொருளாதார ரீதியாக மிகவும் சிரமப்பட்டோம். ஏற்கனவே எங்களுக்கு கடன் இருந்தது. மேற்கொண்டு எங்களுக்கு யாரும் கடன் தர முன்வரவில்லை. அப்பொழுது தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மூலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் கடன் வழங்குவதாகக் கேள்விப்பட்டேன். நான் பி.நாட்டாமங்கலம் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருப்பதால், தனிநபர் கடனுக்கு விண்ணப்பித்தேன்.

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் பணியாளர்கள் நேரடியாக கள ஆய்வு மேற்கொண்டு மிகவும் குறுகிய நாட்களிலேயே ரூ.25,000/ கடனாக வழங்கினர். இந்தத் தொகையை எனது தொழில் மூலப்பொருளான மூங்கில் வாங்கப் பயன்படுத்திக் கொண்டேன்.

தற்போது நானும், என் கணவரும் இணைந்து மூங்கில் கூடைகள், மூங்கில் திரைகள் போன்றவற்றைத் தயாரித்து, சேலம் மாநகரில் உள்ள முக்கிய பகுதிகளில் விற்பனை செய்து வருகிறோம். இதன் மூலம் மாதம் ரூ. 10,000/ வரை வருமானம் கிடைக்கிறது. எங்களின் குடும்ப வறுமையும் நீங்கி வருகிறது. தக்க சமயத்தில் எங்களுக்குக் கைகொடுத்த தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்திற்கு எங்களது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

உரிய நேரத்தில் உதவிய ஊரகப் புத்தாக்கத் திட்டம்

என் பெயர் ராணி, (க/பெ. சந்திரசேகர்), மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், நாவினிப்பட்டி ஊராட்சி, வடக்கு நாவினிப்பட்டி கிராமத்தில் வசித்து வரும் நான், நாவினிப்பட்டி ஊராட்சியில் செயல்பட்டு வரும் பொற்றாமரை மகளிர் சுய உதவிக் குழுவில் நான்கு வருடங்களாக உறுப்பினராக உள்ளேன். நான் எனது வீட்டிலேயே கட்டில், பீரோ மற்றும் மேஜைகளுக்குப் பயன்படுத்தும் பிளாஸ்டிக் அடைப்பான் (Plastic Container) தயாரிக்கும் இயந்திரங்களை வைத்து சுய தொழில் செய்து வருகின்றேன். எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். எனது வருமானம் போதிய நிலையில் இல்லாததால் சுய உதவிக் குழுவில் உள்கடன் பெற்று திருப்பிச் செலுத்தி வருகின்றேன்.

கொரோனா ஊரடங்கு காரணமாக எனது தொழில் முழுவதுமாக முடங்கும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் பற்றி தெரிந்து கொண்டேன். எனது பொற்றாமரை மகளிர் சுய உதவிக் குழுவானது நாவினிப்பட்டி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக இணைந்து, 3 வருடங்களாக சந்தா கட்டி வருவதால் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்திலிருந்து கோவிட் 19 சிறப்பு நிதி உதவித் தொகுப்பிலிருந்து ரூ.40,000/ கடனாகப் பெற்றேன். தற்போது அந்தப் பணத்தை எனது தொழிலுக்காகப் பயன்படுத்தி எனது வருமானத்தைப் பெருக்கியுள்ளேன். உரிய நேரத்தில் உதவிய தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்திற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்பிக்கை அளித்த புத்தாக்கத் திட்டம்

எனது பெயர் விஜயா. ராமநாதபுரம் மாவட்டம், தாமரைக்குளம் ஊராட்சியில் வசித்து வரும் எனக்கு மூன்று பெண் பிள்ளைகள் உள்ளனர். கடந்த பதினைந்து வருடங்களுக்கு முன்னர் எனது கணவர் இறந்து விட்டார். நான் தாமரைக்குளத்தில் கடை வாடகைக்குப் பிடித்து பூக்களைக் கட்டி விற்பனை செய்து எனது பிள்ளைகளை வளர்த்து வந்தேன். தற்சமயம் கொரோனா பிரச்சனை காரணமாக வியாபாரம் குறைந்து விட்டது. அன்றாடம் வரும் வருமானத்தை வைத்து குடும்பம் மட்டுமே நடத்த முடிந்த என்னால் கடை வாடகையைக் கொடுக்க முடியவில்லை.

இதனால் கடையை காலி செய்யும் சூழ்நிலையும், தொழிலையும் தொடர்ந்து செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டு, என்ன செய்வது? என்று தெரியாமல் இருந்தபோது, தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மூலம் நலிவுற்றோர் தொழில் முனைவோருக்கான கடன் வழங்குவதாகக் கேள்விப்பட்டு, எனது கடன் விண்ணப்பத்தினை எங்கள் பகுதியில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு வழங்கினேன்.

எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, எனக்கு கடன் தொகையாக ரூ.20,000/ வழங்கப்பட்டது. இந்தத் தொகையைக் கொண்டு, நான் ஏற்கனவே இருந்த கடையை காலி செய்து விட்டு கோவிலின் அருகே இருந்த பொது இடத்தை ஒப்பந்தம் மூலம் பெற்று இதில் சிறிய அளவில் கடை அமைத்து தற்போது பூக்களைக் கட்டி விற்பனை செய்து வருகிறேன். கடை வாடகை செலவு இல்லை என்பதாலும், கோவிலின் அருகிலே எனது பூக்கடை உள்ளதாலும் எனக்கு ஓரளவு வருமானம் கிடைக்கிறது. என்னைப் போன்ற நலிவுற்றோர்களுக்குத் தொழில் கடன் வழங்கி நம்பிக்கை அளித்து வரும் ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கு மனமார்ந்த நன்றி.

புத்துயிர் கொடுத்த புத்தாக்கத் திட்டம்...!!

என்னோட பேரு காளியம்மாளுங்க!
வெள்ளமடை ஊராட்சியில, சர்க்கார் சாமகுளம்
வட்டாரத்தில,
எங்கள் அழகான கோவை மாவட்டத்தில,
எளிமையான குடும்பத்தில, வாழ்ந்திட்டு வரோமுங்க!

ஏதேதோ வேலை செய்ஞ்சு, கிடைக்கிற வருமானத்தில
சந்தோசமா வாழ்ந்தோமுங்க! எங்க ஊருல பாக்கு மரங்க,
அண்ணாந்து பாக்குற உசரத்தில, பச்சை பசேல்னு
வளருமுங்க!
அப்போதான் இயற்கை அன்னை கொடுத்த இந்த பாக்கு
மரத்த வச்சு,
பாக்கு தட்டு செய்யலாமுனு தோணுச்சுங்க.

எங்க வீட்டுக்காரரு இந்த தொழில பல வருசமா
செஞ்சாருங்க – பசி தீர்த்தோமுங்க
வருசம் உருண்டோட கணவருக்கும் வயசாயிடுச்சுங்க
கொரோனாவும் கோர தாண்டவம் ஆடி வந்திடுச்சுங்க
எங்களோட வாழ்வும் முடங்கிடுச்சுங்க!

பாக்கு தட்டு செய்யவும் முடியலிங்க,
செஞ்ச தட்ட விக்கவும் முடியலிங்க – தட்ட
வித்த காசுல வயித்த மட்டும் தான் வளர்த்தமுங்க,
ஆனா தொழில வளர்க்க முடியலிங்க!

உசிரில்லாத பொருளை அடமான வச்சு
கடன் தரேனு சொன்னாங்க – ஆனா
உசுருள்ள வயசான எங்களுக்கு
கடன் தர மாட்டேனு சொல்லிட்டாங்க!

அப்போதான் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்
எங்கள மாதிரி ஏழைகளுக்கு புத்துயிர் கொடுக்க வந்த
மகத்தான திட்டம்னு தோணுச்சுங்க!
அவுங்க கிட்ட பணத்தை வாங்கி
நானே என்னோட கணவர்கிட்ட தொழில நல்லா
பழகி,பாக்கு மட்டை எடுத்து வந்து அதுக்கு உசுரூட்டி
அழகான வடிவத்தில, குட்டி குட்டியா, பெருசு பெருசா
சாப்பிடுற பாக்கு தட்டு செஞ்சேங்க!

தட்டு வித்த காசுல
எங்க வீட்டுத் தட்டுல சாப்பாடு வந்துச்சுங்க!
எங்க வயிறும், மனசும், நெரம்புச்சுங்க!
பழைய சந்தோசமும் திரும்புச்சுங்க!

கொரோனா பேர கேட்டாலே அலறுகிற இந்த நேரத்தில
கொரோனா சிறப்பு நிதி உதவிங்கற பேருல பணம்
கொடுத்த
தமிழ்நாடு அரசுக்கும்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்துக்கும்,
அதனோட அதிகாரிங்களுக்கும்
ரொம்ப நன்றி சொல்லிக்கிறோமுங்க!!

சு. கவிதா,
செயல் அலுவலர் (தொழில் முனைவு),
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்,
கோயமுத்தூர் மாவட்டம்.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029.
Published from (88,000 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,
Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN

22-ம் ஆண்டில் வெற்றிநடை போடும் முற்றம்

- சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!
- முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின் ஆதரவை தாருங்கள்!
- முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு	ரூ. 200
இரண்டு ஆண்டு	ரூ. 400
மூன்று ஆண்டு	ரூ. 600

விளம்பரக் கட்டணம்

அட்டையின் 2-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் 3-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும். பரிசும் வழங்கப்படும்.

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
மேலாளர், முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம், 3வது மாடி,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 1st Week of the every month

"தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி மூலம் நகர்ப்புற மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்"

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
Empowering Lives

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் நகர்ப்புற ஏழை எளிய மக்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற வீடற்றோருக்காக பல்வேறு திட்டங்களை தீட்டி தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது பெருமைக்குரியது.